REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2022 ஜூன் 29 புதன்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 151 | Wednesday 29, June, 2022 | 20பக்கங்கள் | 40/-

ஜூலை 01ஆம் திகதி முதல்

பஸ் கட்டணம் 30 சத வீதத்தால் அதிகரிப்பு

ஆரம்ப கட்டணம் 40 ரூபாவாகிறது

பஸ் கட்டணத்தை அதிகரிக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. 06

எரிபொருளை இறக்குமதி செய்து விற்க வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அனுமதி

அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக கஞ்சன விஜேசேகர தெரிவிப்பு

எண்ணெய் உற்பத்தி நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள், இலங்கைக்கு எரிபொருள் இறக்குமதி செய்து, சில்லறை விற்பனைச் சந்தையில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளதாக வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். முதல் சில மாதங்களுக்கு இலங்கை மத்திய வங்கி மற்றும் ஏனைய வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கையிருப்புகளைப் பயன்படுத்தாமல் செயற்படக்கூடிய தன்மையில் அடிப்படையில் இதற்கான நிறுவனங்கள் தெரிவு செய்யப்படும் என அவர் தெரிவித்துள்ளார். 06

தற்போதைய சூழல் ஒரு முடக்கமல்ல;

ஜூலை 10 க்குப் பின் நாடு வழமைக்குத் திரும்பும்

நாட்டில் தற்போது காணப்படும் நிலை ஒரு முடக்க நிலையல்ல என தெரிவித்துள்ள சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, எதிர்வரும் ஜூலை 10 ஆம் திகதிக்குப் பின்னர் எரிபொருள் மற்றும் எரிவாயு கிடைக்கும் என்றும் நாடு இயல்பு நிலைக்குத் திரும்பும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த காலகட்டத்தில் மக்களின் ஆதரவு தேவை என்றும் அமைச்சர் ஹரின் கூறினார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் ஜூலை 10 ஆம் திகதி வரை அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் எரிபொருள் விநியோகிக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளதை யடுத்து அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். 06

பிராந்திய கடவுச்சீட்டு அலுவலகங்களிலும்

ஒருநாள் சேவையை ஆரம்பிக்க அமைச்சர் தம்மிக்க தீர்மானம்

யாழ். அலுவலகத்தை சொந்த நிதியில் மேம்படுத்தவும் முடிவு

யாழ்ப்பாணம், கண்டி, மாத்தறை ஆகிய குடிவரவு, குடியகல்வு பிராந்திய அலுவலகங்களிலும் ஒருநாள் சேவை ஆரம்பிக்கப்படும் என முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார். ஊடகமொன்றில் கருத்து வெளியிடும் போது அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கடவுச்சீட்டு ஒருநாள் சேவை துரிதப்படுத்தப்படும். இதற்காக யாழ்ப்பாணம், கண்டி, மாத்தறை ஆகிய பிராந்திய அலுவலகங்களிலும் ஒருநாள் சேவை ஆரம்பிக்கப்படும். 06

இலங்கையில் உணவு பாதுகாப்பினை பலப்படுத்த

எட்டு இலட்சம் சிறார்களுக்கு உணவளிக்க 20 மில்.டொலர்

மேலதிக உதவியாக வழங்குவதாக G7 மாநாட்டில் ஜோ பைடன் அறிவிப்பு

இலங்கையில் உணவுப் பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக மேலதிக உதவியாக இலங்கைக்கு 20 மில்லியன் டொலர்களை வழங்குவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நேற்று G7 உச்சிமாநாட்டில் அறிவித்தார்.

அமெரிக்கா மேற்கொண்ட ஏனைய சமீபத்திய நிதியளிப்பு அறிவிப்புகளின் தொடராக மேற்கொள்ளப்படும் இந்த புதிய உதவிக்கான அறிவிப்பானது தற்போதைய பொருளாதார நெருக்கடியின் போது மிகவும் தேவையுடைய இலங்கையருக்கு வழங்கப்படும்.

இந்த நிதியளிப்பு எதிர்வரும் 15 மாத காலப்பகுதியில் 8,00,000 இற்கும் மேற்பட்ட இலங்கைச் சிறார்களுக்கு உணவளிக்கும் ஒரு பாடசாலை ஊட்டச்சத்து நிகழ்ச்சித் திட்டத்திற்கு உதவிசெய்வதையும் மற்றும் 27,000 இற்கும் மேற்பட்ட கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு உணவு வவுச்சர்களை வழங்குவதையும் நோக்காகக் கொண்டுள்ளது.

இலகுவில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய இலங்கை சமூகங்களில் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காக விவசாய உதவிகள் மற்றும் நிதிப் பங்களிப்பு ஆகியவற்றினூடாக சுமார் 30,000 விவசாயிகளுக்கு உதவிசெய்யவும் இந்த முயற்சி திட்டமிட்டுள்ளது. 06

பெற்றோலிய பொருட்கள்,சமையல் எரிவாயு:

கட்டார் எரிசக்தி அமைச்சருடன் கஞ்சன நேற்று பேச்சுவார்த்தை

சுமுகமாக நடைபெற்றதாக அமைச்சர் அறிவிப்பு

இலங்கைக்கு பெற்றோலிய பொருட்கள், சமையல் எரிவாயு பெற்றுக்கொள்வது தொடர்பாக பேச்சு நடத்தவென எரிசக்தி, மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர கட்டார் சென்றுள்ளார். அமைச்சர் கஞ்சன விஜேசேகர, நேற்று கட்டார் எரிசக்தியின் தலைவரும் பிரதம 06

05 வருடங்களுக்கும் மேலாக மாற்றப்படாத

ரயில் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ள அரசு தீர்மானம் 03

22ஆவது திருத்த சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்க அனுமதி

அங்கீகாரமளித்து அமைச்சரவை அறிவிப்பு

அரசியலமைப்பின் 22ஆவது திருத்த சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

22ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பான அடிப்படைச் சட்டமூலத்திற்கு கடந்த 20ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கொள்கை ரீதியான அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதற்கமைய, சட்ட வரைஞரால் 22ஆவது அரசியலமைப்பு திருத்தம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் 22ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கண்ணிவெடி அகற்றும் பணிக்கு ஜப்பான் 244 மில். நிதியுதவி

கிளிநொச்சியில் நேற்று கைச்சாத்து நிகழ்வு

வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கண்ணிவெடி அகற்றும் பணிகளை தொடர்ந்தும் முன்னெடுக்க ஜப்பான் அரசு சுமார் 244 மில்லியன் ரூபா நிதி உதவியை வழங்கியுள்ளது.

ஜப்பான் அரசின் இந்நன்கொடை மூலம் டாஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இலங்கையின் வட பிராந்தியத்தில் மனித நேய கண்ணி வெடி அகற்றும் பணிகளுக்காக 06

கள்ளச்சந்தை, மாபியாக்களின் பிடியில் பல எரிபொருள் நிலையங்கள்

பொதுமக்கள் குற்றம்சாட்டுவதாக கஜேந்திரகுமார் தெரிவிப்பு

பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் கள்ளச்சந்தை மாபியாக்களின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும், சாதாரண மக்கள் எரிபொருட்களை பெறுவதை அவர்கள் தடுப்பதாகவும் குற்றச்சாட்டுக்கள் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபரை சந்தித்து இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடினர்கள்.

அண்மைய சில நாட்களாக மக்கள் எரிபொருளைப் பெறுவதில் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுவருகின்றனர். இந்த நெருக்கடிகளுக்கு கள்ளச்சந்தை மாபியாக்களும் காரணம் 06

அகில இலங்கை மக்கள் காங்கிரஸிலிருந்து நீக்கம்:

கட்சி தீர்மானத்துக்கு எதிராக முஷாரப் MP வழக்கு தாக்கல்

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எஸ். எம். முஷாரப் தன்னை அகில இலங்கை மக்கள் காங்கிரஸிலிருந்து நீக்கியமை நீதிக்கு முரணானது என்ற அடிப்படையில் அக்கட்சியின் தீர்மானத்திற்கு எதிராக நேற்று முன்தினம் (27) உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

கடந்த மே மாதம் 31ம் தேதி நடைபெற்ற அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட கூட்டத்தில் அவருக்கு எதிராக நடாத்தப்பட்ட ஒழுக்காற்று விசாரணையின் அடிப்படையில் கட்சியின் யாப்புக்கு எதிராகவும் 06

டீசல் பற்றாக்குறை, விலையேற்றம்:

18,000 தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடவில்லை

எரிபொருள் பற்றாக்குறை மற்றும் எரிபொருள் விலையேற்றம் காரணமாக 18,000 தனியார் பஸ்கள் நேற்று முன்தினம் முதல் சேவையில் ஈடுபடவில்லை என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் டிப்போக்கள் ஊடாக தனியார் பேருந்துகளுக்கு டீசல் வழங்கும் வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள போதிலும் அது நடைமுறையில் இல்லை என அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, அகில இலங்கை தனியார் 06

நாட்டின் நெருக்கடி நிலை நீங்க

ஐவேளை தொழுகைகளில் குனூத்துன்னாஸிலா

ஓதுமாறு உலமா சபை வேண்டுகோள்

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நீங்கி நல்ல நிலைமை உண்டாகி மக்கள் தமது இயல்பு வாழ்க்கையின் பக்கம் திரும்ப வேண்டும் என்பதற்காக ஐவேளைத் தொழுகைகளில் குனூத்துன்னாஸிலாவை சுருக்கமாகவும் உறுதியான நம்பிக்கையுடனும் ஒரு மாதகாலத்திற்கு ஓதிவருமாறு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சகல முஸ்லிம்களிடமும் கேட்டுள்ளது. 06

நீதிமன்றை அவமதிக்கும் குற்றத்துக்கு புதிய சட்டம்

அறிமுகப்படுத்த அமைச்சரவை அனுமதி

இலங்கையில் நீதிமன்றத்தை அவமதித்தல் குற்றம், பொருள் கோடல் செய்யப்படாமையால் அவ்வாறான வழக்குகளை விசாரணை செய்வதற்கும் மற்றும் தீர்மானங்களை எடுப்பதற்கும் தெளிவானதும் ஒரே விதமானதுமான நடைமுறையொன்று தற்போது பின்பற்றப்படுவதில்லை.

அதனால் நீதி வழங்கும் செயன்முறையில் தலையிடும் மட்டுப்பாடுகள் மற்றும் கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்தின் கீழ் காணப்படும் மட்டுப்பாடுகள் தொடர்பாகப் புரிந்து கொள்வதில் சிரமங்கள் காணப்படுகின்றன. அதேபோல், நீதிமன்றத்தை அவமதித்தல் 06

இந்தவாரம் பாரிய போராட்டங்கள்

SJB திஸ்ஸ அத்தநாயக்க அறிவிப்பு

இந்த ஆட்சியாளர்களுக்கு எதிராக வீதியில் இறங்கக் காத்திருக்கும் மக்களுடன் ஒன்றிணைந்து இந்த வாரம் ஆட்சி மாற்றத்திற்கான போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ – விக்ரமசிங்க ஆட்சியின் நாட்கள் எண்ணப்படுகின்றன. 06

சுகாதார ஊழியர்கள் இருநாள் வேலைநிறுத்தம்

இன்றும் நாளையும் பகிஷ்கரிக்க தீர்மானம்

நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடிக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் (PHIU) உள்ளிட்ட துணை மருத்துவத் தொழில்களுக்கான கூட்டு கவுன்சில் இரண்டு நாள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளது. இந்த தொழிற்சங்க நடவடிக்கை இன்று (29) மற்றும் நாளை (30) முன்னெடுக்கப்படும் என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன 06

மட்டுப்படுத்தப்பட்டுள்ள கொழும்பு மாவட்ட நீதிமன்ற செயற்பாடுகள்

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் பணிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்ட நீதிமன்ற பதிவாளர் நாயகத்தின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நேற்று(செவ்வாய்கிழமை) 06

டொலர் பெறுமதியில் மீண்டும் வீழ்ச்சி

விற்பனை விலை 367.22 ஆக பதிவு

அமெரிக்க டொலரொன்றின் பெறுமதியில் நேற்றைய தினம் சிறு வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இதன்படி, இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலரொன்றின் விற்பனை பெறுமதி 367 ரூபா 22 சதமாக பதிவாகியுள்ளது.

அதேசமயம், டொலரொன்றின் 06

நள்ளிரவில் எரிபொருள் நிரப்ப வந்த

பொலிஸ் வாகனத்தை முற்றுகையிட்ட குழு

வவுனியாவில் ஏற்பட்ட பதற்றம் தணிவு

வவுனியா நான்காம் கட்டை பகுதியில் அமைந்துள்ள ஐஓசி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் எரிபொருள் நிரப்ப வந்த பொலிஸாரை இளைஞர்கள் முற்றுகையிட்டதால் பதற்ற நிலை ஏற்பட்டது.

பொதுமக்களுக்கு பெற்றோல் முடிவடைந்து விட்டதாக எரிபொருள் 06

சர்வதேச செய்திகள்

அமெரிக்காவில் கைவிடப்பட்ட லொறியில் 46 சடலங்கள் மீட்பு

அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் கைவிடப்பட்ட கொள்கலன் லொறி ஒன்றில் குறைந்தது 46 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதன்போது நான்கு சிறுவர்கள் உட்பட 16 பேர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக தீயணைப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உயிர் தப்பியவர்கள் அதிக உடல் சூட்டுடன் காணப்பட்டதாகவும் இவர்கள் வெப்பத் தாக்கம் மற்றும் வெப்பத்தால் ஏற்பட்ட சோர்வினால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்த சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்ட சான் அன்டோனியோ புறநகர் பகுதி அமெரிக்க மற்றும் மெக்சிகோ எல்லையில் இருந்து 250 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது. இது ஆட்கடத்தல்காரர்களின் பிரதான போக்குவரத்துப் பாதையாக உள்ளது.

அமெரிக்காவுக்குள் நுழையும் ஆவணங்கள் இல்லாத குடியேறிகளை தொலைதூர பகுதிகளில் சந்திக்கும் ஆட்கடத்தல்காரர்கள் அவர்களை அழைத்துவர பெரும்பாலும் லொறிகளையே பயன்படுத்துகின்றனர்.

"அவர்கள் குடும்பங்களை கொண்டிருந்தனர். சிறந்த வாழ்க்கை ஒன்றை தேட முயற்சித்திருக்கலாம்" என்று சான் அன்டோனியோ மேயர் நைரென்பேர்க் தெரிவித்தார். "இது பயங்கரமான, மனித அவலத்தை தவிர ஒன்றுமில்லை" என்றும் அவர் கூறினார்.

இறந்த உடல்கள் பற்றிய செய்தி கிடைத்ததை அடுத்து அவசரப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் உள்ளூர் நேரப்படி கடந்த திங்கட்கிழமை மாலை சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

"ஒரு லொறியைத் திறக்கும் போது அதற்குள் நாங்கள் இறந்த உடல்களின் அடுக்குகளைப் பார்த்திருக்கக்கூடாது. நாங்கள் யாரும் அதைக் கற்பனை செய்துகொண்டு வேலைக்கு வருவதில்லை," என்று சான் அன்டோனியோ தீயணைப்புப் பிரிவின் தலைவர் சார்லஸ் ஹூட் செய்தியாளர்களிடம் கூறினார்.

ஓட்டுநரால் கைவிடப்பட்ட வாகனத்தில் குளிரூட்டும் வசதியில்லை என்றும் அதற்குள் குடிநீர் இல்லை என்றும் அவர் கூறினார்.

சான் அன்டோனியோவின் தென் மேற்குப் பகுதியில் ரயில் பாதைகளுக்கு அடுத்ததாக வாகனம் கண்டுபிடிக்கப்பட்டது.

மெக்சிகோவின் வெளியுறவு அமைச்சர் மார்செலோ எப்ரர்ட், மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டவர்களில் குவான்தமாலா நாட்டைச் சேர்ந்த இரண்டு பேர் இருப்பதாகக் கூறினார். பாதிக்கப்பட்ட மற்றவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது இதுவரை தெரியவரவில்லை.

அமெரிக்காவில் புலம்பெயர் குடியேற்றம் என்பது ஒரு சர்ச்சைக்குரிய அரசியல் பிரச்சினையாக உள்ளது. அங்கு கடந்த ஆண்டு மெக்சிகோவில் இருந்து அமெரிக்காவுக்குள் நுழைந்த பதிவு செய்யப்படாத ஆவணமற்ற புலம்பெயர்ந்தோர்தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலர் மிகவும் ஆபத்தான, பாதுகாப்பற்ற பாதைகளில் பயணம் செய்து வந்திருந்தனர்.

கோடை மாதங்களில் சான் அன்டோனியோ மிகவும் வெப்பமாக இருக்கும். கடந்த திங்கட்கிழமையன்று 39.4 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவானது.

மத்திய அமெரிக்காவில் வறுமை மற்றும் வன்முறையிலிருந்து தப்பித்து, ஆவணமற்ற புலம்பெயர்ந்தவர்களில் பலர், அமெரிக்க எல்லையைத் தாண்டி வருவதற்காக ஆட்கடத்தல்காரர்களுக்குப் பெரும் தொகையைச் செலுத்துகிறார்கள்.

அண்மைய ஆண்டுகளில், புலம்பெயர்ந்தோர் தங்கள் பயணத்தின் போது உயிரிழந்ததற்கு இதுபோன்ற பல உதாரணங்கள் உள்ளன. ஆனால், திங்கட் கிழமையன்று கண்டுபிடிக்கப்பட்டதைப் போல எந்தவொரு கொடிய நிகழ்வும் இதுவரை இல்லை.

கெமரூன் இன மோதலில் 30க்கும் மேற்பட்டோர் பலி

மேற்கு கெமரூனில் இனரீதியான தாக்குதல் ஒன்றில் பெண்கள், சிறுவர்கள் உட்பட 30க்கும் அதிகமான கிராம மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

நைஜீரிய எல்லைக்கு அருகில் பகின்ஜோவ் கிராமத்தில் வார இறுதியில் இந்தப் படுகொலை இடம்பெற்றிருப்பதாக கெமரூனின் பிரைபைடேரியன் தேவாலயத்தின் பேச்சாளர் சங்கைக்குரிய பொன்கி சாமுவேல் போர்பா தெரிவித்துள்ளார்.

ஒலிட்டி மற்றும் மெசகா எகோல் இனக் குழுக்களுக்கு இடையே நிலப் பிரச்சினை ஒன்று தொடர்பாகவே அந்த மோதல் வெடித்திருப்பதாக போர்பா ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

"ஒலிட்டி மக்கள் 2022 ஏப்ரல் 29 ஆம் திகதி மெசகா எகோல் மக்கள் சிலரை தாக்கிக் கொன்றனர். அதற்கு மெசகா எகோல் மக்கள் பதில் தாக்குதல் நடத்தியுள்ளனர்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய ஆபிரிக்க நாடான கெமரூனில் இன மோதல்கள் அடிக்கடி இடம்பெற்றபோதும் இந்த அளவான உயிரிழப்புகள் தூர வடக்கு பிராந்தியத்தில் பதிவாகி வருகின்றன. கடந்த டிசம்பரில் கால்நடை வளர்ப்பு, மீன்பிடி மற்றும் விவசாய சமூகங்களுக்கு இடையே இரண்டு வாரங்கள் நீடித்த மோதலில் 44 பேர் கொல்லப்பட்டு 111 பேர் காயமடைந்தனர்.

இஸ்ரேல் பாராளுமன்றை கலைக்க ஆதரவு வாக்கு

இஸ்ரேல் பாராளுமன்றத்தை கலைப்பதற்கு ஆதரவாக அந்நாட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று ஏகமனதாக வாக்களித்துள்ளனர். இது அந்நாட்டில் கடந்த நான்கு ஆண்டுகளில் ஐந்தாவது பொதுத் தேர்தலுக்கு வழிவகுத்துள்ளது.

இதன்படி பாராளுமன்றம் கலைக்கப்பட்டு வரும் ஒக்டோபர் 25 அல்லது நவம்பரில் 1இல் தேர்தல் நடத்தப்படவுள்ளது. இதற்கான திகதி மேலும் பேச்சுவார்த்தைக்குப் பின் தீர்மானிக்கப்படவுள்ளது.

எனினும் பாராளுமன்றத்தில் மேலும் இரண்டு சுற்று வாக்கெடுப்புகளில் இந்தத் தீர்மானம் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

எரிபொருள் ஏற்றத்தை எதிர்த்து பெருவில் லொறி ஓட்டுநர்கள் போராட்டம்

பெருவில், எரிபொருள் விலை உயர்வால் ஏற்பட்டுள்ள தாக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கக்கோரி சரக்கு வாகன ஓட்டுநர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

எரிபொருள் விலை கடுமையாக உயர்ந்ததையடுத்து, அங்கு போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

அதனை கட்டுப்படுத்த பெருவில் அவசர நிலை அமுல்படுத்தப்பட்டுள்ள சூழலில், துறைமுக நகரான காலோவில் சரக்கு வாகன ஓட்டிகள் டிரக்குகளில் ஒலி எழுப்பியபடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்புடன் தொடர்புபட்டே உலகளாவிய எரிபொருள் விலை அதிகரித்துள்ளது. இது உலகின் இரண்டாவது மிகப்பெரிய செப்பு தயாரிப்பு நாடான பெருவில் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

அங்கு உரத்தின் விலை அதிகரித்திருக்கும் சூழலில் இறக்குமதிகளை பெற அரசு தவறி இருப்பதால் உணவு விநியோகத்திலும் நெருக்கடி ஏற்பட வாய்ப்பு உள்ளது.

உர விலை அதிகரிப்பு மற்றும் பற்றாக்குறை காரணமாக சில விவசாய சங்கங்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜோர்தானில் நச்சு வாயு கசிவு: பதினொருவர் பலி

ஜோர்தானின் செங்கடல் துறைமுகமான அகாபாவில் குளோரின் நச்சு வாயு கசிந்து 11 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு 250க்கும் அதிகமானவர்கள் காயமடைந்திருப்பதாக அரச ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

இரசாயன சேமிப்பு கொள்கலனை கொண்டு செல்லும்போது கிரேனில் ஏற்பட்ட கோளாறினால் அது கீழே விழுந்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலே உயர்த்தப்பட்ட கொள்கலன் பின்னர் திடீரென்று கப்பல் ஒன்றின் மீது விழுந்து வெடிப்பது சி.சி.ரீ.வி கெமராவில் பதிவாகியுள்ளது. மஞ்சள் நிற வாயு அந்தப் பகுதி எங்கும் பரவுவதும் மக்கள் பாதுகாப்பான இடத்தை நோக்கி தப்பி ஓடுவதும் அதில் தெரிகிறது. காயமடைந்த 199 பேர் உள்ளூர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும் சிலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

தொழில்துறை இரசாயனமாக பயன்படுத்தப்படும் குளோரின் வாயு, அதிக அளவில் வெளிப்படுவது நுரையீரலை பாதிக்கும்.

சின்ஜியாங் இறக்குமதிக்கு அமெரிக்கா தடை விதிப்பு

சீனா உய்குர் மக்களை கட்டாய உழைப்புக்கு பயன்படுத்துவதால் சின்ஜியாங்க் மாகாணத்தின் உற்பத்தி பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதை அமெரிக்க சட்டமொன்று தடை செய்துள்ளது,

உய்குர் கட்டாய உழைப்பு சட்டம் என்ற பெயரிலான இச்சட்ட விதிகளின் ஊடாக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கட்டாய உழைப்பின் மூலமான சீன உற்பத்திகளின் இறக்குமதியைத் தடுப்பதற்காக அமெரிக்க அதிகாரிகளுக்கு அதிக அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையொன்றில், "உய்குர் கட்டாய உழைப்பு தடுப்புச் சட்டத்தின் விதிகளை அமெரிக்க சுங்கமும் எல்லைப் பாதுகாப்பு பிரிவும் நடைமுறைப்படுத்தும். இதன் ஊடாக சின்ஜியாங் மாகாணத்தின் கட்டாய உழைப்பு மூலமான உற்பத்தி பொருட்கள் அமெரிக்காவுக்குள் இறக்குமதி செய்யப்பட இடமளிக்கப்படாது" என குறிப்பிடப்பட்டுள்ளது.

101 வயது நாஜி வதை முகாம் காவலருக்கு 5 ஆண்டுகள் சிறை

101 வயதான நாஜி வதை முகாமின் முன்னாள் காவலர் ஒருவருக்கு ஜெர்மனி நீதிமன்றம் ஒன்றினால் ஐந்து ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. நாஜி படுகொலை தொடர்பிலான போர் குற்றத்தில் சிறைத் தண்டை விதிக்கப்படும் மிக வயதானவராக இவர் பதிவாகியுள்ளார்.

ஜோசப் ஸ்குவட்ஸ் என்ற அந்த முதியவர் 1942 மற்றும் 1945 க்கு இடைப்பட்ட காலத்தில் வடக்கு பெர்லினில் உள்ள சக்சன்ஹோஸ் முகாமில் சிறைக் காவலர் ஒருவராக பணியாற்றி உள்ளார். கொலைக்கு துணை நின்றதாக நேற்று இடம்பெற்ற வழக்கு விசாரணையில் அவர் குற்றங்காணப்பட்டார்.

பிரன்டன்போர்க் மாநிலத்தில் வாழும் ஓய்வூதிக்காரராக அவர் தாம் நிரபராதி என வாதிட்டார். தாம் எந்த குற்றமும் செய்யவில்லை என்றும் அந்த முகாமில் கொடூரமான குற்றங்கள் நிகழ்ந்தது தமக்கு தெரியாது என்றும் குறிப்பிட்டார். "நான் ஏன் இங்கே இருக்கிறேன் என்று எனக்குத் தெரியவில்லை" என்று குறிப்பிட்டார் ஸ்குவட்ஸ்.

எனினும் முகாமில் இடம்பெற்ற 3,518 கைதிகளின் கொலையில் அவர் தெரிந்தும் விரும்பியும் பங்கேற்றுள்ளார் என்று அரச வழங்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

1936க்கும் 1945க்கும் இடைப்பட்ட காலத்தில் 200,000க்கும் அதிகமானோர் அந்த வதை முகாமில் அடைக்கப்பட்டிருந்ததாய் வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன.

ஸ்குவட்ஸ் போன்று ஜெர்மனியில் 90 வயதுக்கு மேற்பட்ட மேலும் பலர் கடந்த சில ஆண்டுகளில் தண்டனை பெற்றனர். கிட்டத்தட்ட 70 ஆண்டுகளுக்குப் பின்னர் இவர்களைப் பிடித்து, வழக்கு நடத்தி தண்டிக்க வேண்டிய அவசியம் என்ன என்று பலர் கேள்வி எழுப்புகின்றனர்.

ஆனால் தனிநபர்களின் அரசியல், ஒழுக்கப் பொறுப்புகளை மறுவலியுறுத்தவே இவ்வாறு செய்யப்படுவதாய்க் கவனிப்பாளர்கள் கூறுகின்றனர்.

உக்ரைனிய கடைத்தொகுதியில் ரஷ்யா தாக்குதல்: 16 பேர் பலி

உக்ரைனின் கிரமென்சோக் நகரில் ஒரு நெரிசல்மிக்க கடைத்தொகுதியில்ரஷ்யாநடத்தியதாக்குதலில் 16 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கடைத்தொகுதி மிகக் கூட்டமாக இருந்தபோது வேண்டுமென்றே தாக்குதல் நடத்தி இருப்பதாக உக்ரைனிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது. அப்போது கடைத்தொகுதியில் 1,000க்கும் அதிகமானோர் இருந்ததாகக் கூறப்பட்டது.

ஐரோப்பிய வரலாற்றிலேயே மிகத் துணிச்சலாக நடத்தப்பட்ட பயங்கரவாதச் செயல் இது என்று உக்ரைனிய ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி வர்ணித்தார். 59 பேர் காயமுற்றதாகவும் அவர்களில் 25 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

உலகத் தலைவர்கள் ஜி7, நேட்டோ உச்சநிலைச் சந்திப்புகளுக்குத் தயாராகும் வேளையில் ரஷ்யா இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது. உக்ரைனுக்குத் துணைநிற்பதாக ஜி7 தலைவர்கள் வெளியிட்ட கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினும் ஏனையோரும் தாக்குதலுக்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று ஜி7 தலைவர்கள் கூறியுள்ளனர்.

அல் கொய்தா மூத்த தலைவர் அமெரிக்கத் தாக்குதலில் பலி

அல் கொய்தா அமைப்புடன் தொடர்புபட்ட மூத்த தலைவர் ஒருவரை இலக்கு வைத்து சிரியாவின் இத்லிப் மாகாணத்தில் சுற்றிவளைப்புத் தேடுதல் ஒன்றை மேற்கொண்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதலில் அவர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அல் கொய்தாவுடன் தொடர்புபட்ட ஹுராஸ் அல் தீன் அமைப்பின் மூத்த தலைவரான அபூ ஹம்சா அல் யெமனி மோட்டார் சைக்கிளில் தனியாக பயணித்துக் கொண்டிருக்கும்போது அவரை இலக்கு வைத்தே கடந்த திங்கட்கிழமை இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்க மத்திய கட்டளையகம் வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

அவர் சென்ற மோட்டார் சைக்கிள் மீது இரு ரொக்கெட் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதலில் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படவில்லை என்று ஆரம்பக்கட்ட மீளாய்வில் தெரியவந்ததாகவும் அது குறிப்பிட்டது.

"இந்த மூத்த தலைவரை அகற்றி இருப்பது அமெரிக்க மக்கள், எமது கூட்டாளிகள் மற்றும் உலகெங்கும் உள்ள அப்பாவிகள் மீதான அல் கொய்தாவின் தாக்குதல் திறனை முறியடிக்கும்" என்று அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

தினகரன்
THINAKARAN
தினகரன்

2022 ஜூன் 29 புதன்கிழமை

தொழுகை நேரம்

26 முதல் 30 வரை

சுபஹ்	04.34
லுஹர்	12.15
அஸர்	03.42
மஃரிப்	06.30
இஷா	07.47

இன்றைய சுபதினம்

சுபகிருது வருடம் ஆனி 15

ராகுகாலம்	: பகல்	:	12.00 - 1.30வரை
சுபநேரம்	: காலை	:	09.00 - 10.30வரை

யோகம்: சித்தயோகம்

திதி: பிரதமை

இராசி பலன்கள்

மேஷம்	நன்மை
ரிஷபம்	பாராட்டு
மிதுனம்	தனம்
கடகம்	போட்டி
சிம்மம்	கோபம்
கன்னி	முயற்சி
துலாம்	சுகம்
விருச்சிகம்	நிறைவு
தனுசு	வெற்றி
மகரம்	பொறுமை
கும்பம்	மறதி
மீனம்	செலவு

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

திறந்த பல்கலைக்கழகத்தின் உளவியலில் இளங்கலை பட்டம் பெற்ற செமினி கௌசல்யா எழுதிய புத்தகத் தொகுதியொன்றை ஊடகத்துறை அமைச்சின் செயலாளரும் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தலைவருமான அனுஷ பெல்பிட்டவிடம் கையளித்தபோது... (படம்: சுதத் மலவீர)

எரிபொருள் வர தாமதமானால் மின்வெட்டு நேரம் நீடிக்கும்

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு எச்சரிக்கை

எரிபொருள் இறக்குமதியை தாமதப்படுத்தினால் எதிர்காலத்தில் மின்வெட்டு காலம் நீடிக்கப்படும் அபாயம் உள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அடுத்த ஒரு வாரத்துக்கு மூன்று மணித்தியால மின்வெட்டை தொடர்ந்து அமுல்படுத்துவதற்கு இலங்கை மின்சார சபையிடம்

போதிய எரிபொருள் இருப்பு உள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, உத்தேச மின் கட்டண திருத்தம் பொதுமக்களின் ஆலோசனைக்காக பகிரங்கப்படுத்தப்படும். பொதுமக்கள் நேற்று (28) முதல் 21 நாட்களுக்குள் ஆணைக்குழுவிடம் முன்மொழிவுகளை சமர்ப்பிக்க முடியும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எம்.பிக்கள் பாராளுமன்றில் ஆற்றும் அநாவசிய உரைகளை நிராகரிக்கவும்

பாராளுமன்ற ஊடகவியலாளர்களிடம் சபாநாயகர் வேண்டுகோள்

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

பாராளுமன்றத்தில் உரையாற்றும் உறுப்பினர்களின் அநாவசிய பேச்சுக்களை பாராளுமன்ற ஊடகவியலாளர்கள் நிராகரிக்க வேண்டும். அவற்றுக்கு முக்கியத்துவம் வழங்கக் கூடாது என தெரிவித்துள்ள சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, அவ்வாறு முக்கியத்துவம் வழங்குவதால் மக்கள் குழப்பமடைய நேர்கிறதென தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 225 உறுப்பினர்களையும் வேண்டாமென மக்கள் சொல்வார்களாயின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன? என்றும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்ற ஊடகவியலாளர்களுக்கான விசேட கருத்தரங்கு ஒன்று நேற்றைய தினம் கொழும்பு சினமன் கிரேன்ட் ஹோட்டலில் நடைபெற்றது. அங்கு விசேட உரையாற்றும் போதே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சரவை கலைக்கப்பட்டு, பிரதமர் பதவி விலக்கப்பட்டதால் என்ன நடந்தது? கிடைக்க வேண்டியதெல்லாம் கிடைத்து விட்டதா,?

அதே வேளை, புதிய பிரதமர் நியமிக்கப்பட்டு புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டு என்ன நடந்தது? எரிபொருள் கிடைத்து விட்டதா அத்தியாவசிய பொருட்கள் கிடைத்து விட்டனவா? அடுத்தது என்ன என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தைக் கலைத்து மீண்டும் தேர்தல் நடத்தினால் மீண்டும் 225 பேர் வருவர். அப்போது எல்லாம் சரியாகிவிடுமா? அப்படியானால் அரசியலமைப்பை வீசி எறிந்து விடுவோமா?

மக்களுக்கான பொறுப்பை நாம் சரியாக நிறைவேற்ற வேண்டும். அதனை பாதுகாப்பது அவசியம். நாடு மற்றும் எதிர்கால சந்ததியினர் தொடர்பில் நாம் சிந்திக்க வேண்டும். பாராளுமன்றத்தின் மீதான மக்கள் நம்பிக்கையை வென்றெடுக்க வேண்டியது அவசியமாகும்.

புதிதாக அரசாங்கம் அமைக்கப்பட்டு புதிதாக வந்தவர்களும் அதையே செய்து விட்டு போய்விடுவர். அந்த நிலையிலும் நாம் வாழ வேண்டியுள்ளது. எமது பிள்ளைகள் வாழ வேண்டும். கொரோனா சூழ் நிலையிலும் தொடர்ச்சியாக பாடசாலைகள் மூடப்பட்டன. மீண்டும் இப்போதும் பாடசாலைகள் மூடப்படுகின்றன. நாம் எங்கே சென்று கொண்டிருக்கிறோம்? என்றும் சபாநாயகர் கேள்வி எழுப்பினார் .

அதேவேளை, மக்கள் தமது தேவைகளுக்காக பெரும் அசௌகரியங்களை 06

முச்சக்கர வண்டியில் பயணித்த

உடப்பு கூ. கிராமிய வங்கியின் முகாமையாளரான பெண் மாயம்

புத்தளம் குறூப் நிருபர்

உடப்பு தமிழ்க் கிராமத்திலுள்ள ஆராச்சிக்கட்டு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்குரிய கூட்டுறவு கிராமிய வங்கியின் முகாமையாளரான பெண் காணாமல் போனதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் உடப்பு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஆராச்சிக்கட்டுவ பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் உடப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வங்கி முகாமையாளர் ஆராச்சிக்கட்டு பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டவராவார். கடந்த 27ஆம் திகதி இரவு 11.00 மணியளவில் கிராமிய வங்கியை மூடிவிட்டு முச்சக்கர வண்டியில் இவர் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

முச்சக்கரவண்டியில் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக வண்டி பாதியில் நின்றதால் முச்சக்கரவண்டியை விட்டு இறங்கி நடந்து சென்றதாக முச்சக்கர வண்டி சாரதி தெரிவித்துள்ளார்.

இதனை அடிப்படையாகக் கொண்டு அவர் காணாமல் போனமை தொடர்பில் உடப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முச்சக்கரவண்டி முந்தல் நோக்கி சென்றதாகவும் அதன்பின்னர் அவர் எங்கு சென்றார் என்பது பற்றியும் முந்தல் பொலிஸார் 06

இந்திய தொழிற்றுறை வல்லுநர் வி.கிருஷ்ணமூர்த்தி காலமானார்

இந்தியாவில் 'பொதுத் துறை நிறுவனங்களின் தந்தை' என அழைக்கப்படும் தொழில் துறை வல்லுநர் வி.கிருஷ்ணமூர்த்தி தனது 97ஆவது வயதில் நேற்று முன்தினம் காலமானார்.

பெல், மாருதி உத்யோக் மற்றும் SAIL ஆகிய நிறுவனங்களின் முன்னாள் தலைவரான வி.கிருஷ்ணமூர்த்தி அந்நிறுவனங்களின் மிகப்பெரிய வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்துள்ளார்.

இரண்டாம் உலகப்போரின் போது விமான நிலையங்களில் தொழில்நுட்ப வல்லுநராக தனது பணியை தொடங்கினார். பெல் நிறுவனம் மிகப் பெரிய நஷ்டத்தில் இருந்த போது அந்த நிறுவனத்தை தன்னுடைய முயற்சியினால் இலாபகரமாக மாற்றிய பெருமைக்குரியவராவார்.

மாருதி நிறுவனத்தின் தலைவராக பதவியேற்ற வி.கிருஷ்ணமூர்த்தி இந்தியாவில் ஒட்டோமொபைல் துறையில் நவீன சகாப்தத்தை அறிமுகப்படுத்தினார். மாருதியின் 800 மாதிரிகளை அறிமுகப்படுத்திய தன் மூலம் அத்துறையில் ஒரு புதிய புரட்சியை ஏற்படுத்தினார்.

வி.கிருஷ்ணமூர்த்தியின் சிறப்பான சேவையை பாராட்டி 1973ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருதும், 1986 ஆம் ஆண்டு பத்ம பூஷன் விருதும், 2007ஆம் ஆண்டு பத்ம விபூஷன் விருதுகளும் அவருக்கு வழங்கப்பட்டது.

2009 ஆம் ஆண்டு ஜப்பானின் உயரிய சிவிலியன் விருதான Grand Cordon of the Order of the Rising Sun என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். அவருடைய மறைவுக்கு தொழிலதிபர்கள் இரங்கல்களை தெரிவித்து வருகின்றனர்.

பணிப்பெண்ணாக வெளிநாடு செல்பவர்களுக்கு

குடும்பப் பின்னணி அறிக்கை இனிமேல் தேவையில்லை

இரண்டு (02) வயதோ அல்லது அதற்கு மேற்பட்ட பிள்ளைகளுள்ள பெண்கள் வேலைவாய்ப்புக்களுக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் போது கட்டாயமாகக் குடும்பப் பின்னணி அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டுமெனும் தேவையிலிருந்து விடுவிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடயங்களைக் கருத்தில் கொண்டு அமைச்சரவை இதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வீட்டுப் பணிகளுக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் புலம்பெயர் பெண் தொழிலாளர்களுக்கு 05 வயதுக்குக் குறைவான பிள்ளைகள் இன்மையை உறுதிப்படுத்தும் நோக்கில் தற்போது நிலவுகின்ற 'குடும்பப் பின்னணி அறிக்கை' சமர்ப்பிக்கப்பட வேண்டிய கட்டாயத் தேவை இருப்பதால், பெண்களின் உரிமைகள் மீறப்படுவதாக பெண்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சர்வதேச அறிக்கைகள் பலவற்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவ்வாறே ஒருசில சந்தர்ப்பங்களில் இந்த அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்காக தேவையான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருப்பினும், ஒருசில அலுவலர்கள் பல்வேறு காரணங்களால் அறிக்கையைத் தாமதப்படுத்துவதால் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்காக செல்வதற்கு எதிர்பார்க்கின்ற பெண்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையை சமர்ப்பித்தற்குத் தகைமையற்ற ஒருசில பெண்கள் வேறு சட்டவிரோத வழிமுறைகளைக் கையாண்டு எந்தவொரு கண்காணிப்புக்களுமின்றி வெளிநாடுகளுக்குச் சென்று பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துள்ள சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

05 வருடங்களுக்கும் மேலாக மாற்றப்படாத

ரயில் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ள அரசு தீர்மானம்

அமைச்சரவையும் அங்கீகாரம் வழங்கியது

எரிபொருள் விலை அதிகரிப்பை கருத்திற் கொண்டு ரயில் கட்டணங்களில் திருத்தங்களை செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரச கொள்கைகளுக்கு அமைய பயணிகள் போக்குவரத்துக்காக இலங்கை ரயில்வே திணைக்களம் சலுகை அடிப்படையிலான கட்டண முறையை இதுவரை பின்பற்றிவருகிறது. ஆனாலும், அண்மைக் காலங்களில் எரிபொருள் விலை அதிகரிப்புகளால் திணைக்களத்தின் மீண்டெழும் நட்டங்கள் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டு செல்கின்றன. இதனால் திருப்திகரமான ரயில் சேவைகளை மேற்கொண்டு நடத்திச் செல்வதற்கு ஏற்ற வகையில் திணைக்களத்தின் தற்போதைய வருமானத்தை அதிகரிக்க வேண்டியுள்ளது.

அதன்படி ஐந்து வருடங்களுக்கும் மேலாக திருத்தம் செய்யப்படாத ரயில் கட்டணம், பதினான்கு வருடங்களுக்கு மேலாக திருத்தம் செய்யப்படாத சரக்குகள் போக்குவரத்து மற்றும் தபால் போக்குவரத்து நடவடிக்கைகள் மற்றும் ஏனைய சரக்குகள் போக்குவரத்துக்காக அறவிடப்படும் ரயில் கட்டணங்களைத் திருத்தம் செய்வதற்காக போக்குவரத்து அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

விமான நிலையம் செல்ல முடியாமல் தவித்த ரஷ்ய சுற்றுலா பயணிக்கு

எரிபொருள் வழங்கிய நெகிழ்ச்சி சம்பவம்

அவசரமாக விமான நிலையம் செல்வதற்கு எரிபொருள் இல்லாமல் தவித்த ரஷ்ய தம்பதிக்கு கலேவெல தலகிரியாகம பிரதேசத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளர் தங்களது பாதுகாப்பு இருப்புகளிலிருந்து எரிபொருளை வழங்கி அவர்களை விமான நிலையத்துக்கு அனுப்பி வைத்த சம்பவமொன்று கடந்த 27 ஆம் திகதி இடம் பெற்றுள்ளது.

நாடு திரும்புவதற்காக விமான நிலையம் செல்லவிருந்த ரஷ்ய தம்பதியினர் எரிபொருள் இல்லாமல் தவித்துள்ளனர். பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் முற்றாக மூடப்பட்டிருந்ததால், அவர்கள் எரிபொருளைப் பெற முடியாமல் தவித்துள்ளனர்.

தாம் ரஷ்யாவிலிருந்து இலங்கைக்கு வந்த தம்பதியென்றும்,

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்துக்கு செல்வதற்கு எரிபொருள் வழங்குமாறும் கேட்டுள்ளார்.

அதன்படி, எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளர் ராஜபக்ஷ பண்டார என்பவர் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் தீர்ந்து போயிருந்த போதிலும், தனது எரிபொருள் பம்பிகளுக்கு சேதம் ஏற்படாதவாறு 06

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக சட்டத்தரணி நடராஜர் காண்டீபன், தெரிவுசெய்யப்பட்டதுடன் பொதுச்செயலாளராக ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி தெரிவுசெய்யப்பட்டார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் 80வது ஆண்டுப் பொதுக் கூட்டம் சங்கத்தலைவர் ந.காண்டீபன் தலைமையில் கடந்த 26ம் திகதி இடம்பெற்றது. அக்கூட்டத்தில் காப்பாளராக பேராசிரியர் எஸ். தில்லைநாதன், துணைக்காப்பாளர்களாக கலாநிதி.செல்விதிருச்சந்திரன்,பேராசிரியர் எம்.கருணாநிதி, வே.கந்தசாமி, கலாநிதி க.இரகுபரன் காசுபதி நடராஜா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை உறுப்பினர்களாக சிரேஸ்ட சட்டத்தரணி கே.எஸ்.இரத்தினவேல், ஜனாதிபதி சட்டத்தரணி வி.புவிதரன், கணக்காளர் என்.பஞ்சாட்சரம் 06

நாணய மாற்று

	வாங்கும் விலை	விற்பனை விலை
அவுஸ்திரேலியா டொலர்	244.72	256.37
கனடியன் டொலர்	274.76	287.63
யூரோ	374.97	389.87
ஜப்பான் யென்	2.6185	2.7277
சிங்கப்பூர் டொலர்	255.69	266.25
ஸ்டேலிங் பவுன்ஸ்	435.04	452.19
சுவிஸ் பிராங்க்	370.82	387.30
அமெரிக்க டொலர்	356.06	367.22

மத்திய கிழக்கு	குறித்த விலை		குறித்த விலை
பஹ்ரின் டினார்	954.60	கட்டார் ரியால்	98.41
குவைத் டினார்	1,173.74	சவூதி ரியால்	95.88
ஓமான் ரியால்	934.79	ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம்	97.98

தினகரன்
THINAKARAN
கிகைரன்
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆனி 15ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 துல்ஹாதா 29

குறள் தரும் சிந்தனை

பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை

பழியை மேற்கொண்டு இழிதொழில் செய்து பெறும் செல்வத்தை விடச் சான்றோர் வினைத்தூய்மையோடிருந்து பெறும் பொல்லாத வறுமையே சிறந்தது.

எரிபொருள் விநியோக முறைகேடு கட்டுப்படுத்தப்படுவது அவசியம்!

எரிபொருள் நெருக்கடி நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் தீவிர நிலையை அடைந்துள்ளது. இதற்கு மக்கள் எதிர் கொள்ளும் அசௌகரியங்களும் நெருக்கடிகளும் நல்ல சான்றாக விளங்கிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக எரிபொருள் நெருக்கடியானது மக்களின் இயல்பு வாழ்வைப் பாதித்துள்ளது. எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக பெரும்பாலானவர்கள் எரிபொருள் நிரப்பும் நிலையங்களிலும் வீதிகளிலும் நாட்கணக்கில் காத்துக் கிடக்கும் நிலைக்கு தள்ளப் பட்டுள்ளனர்.

அந்நிய செலாவணி பற்றாக்குறையினால் தோற்றம் பெற்றுள்ள இந்த எரிபொருள் நெருக்கடி தற்போதைய நெருக்கடி நிலையை அடைந்திருக்கின்றது. ஆனால் நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் பொலிஸாரும், விஷேட அதிரடிப்படையினரும் மேற்கொண்ட திடீர்த் தேடுதல் நடவடிக்கைகளின் போது அதிக விலைக்கு விற்பனை செய்யும் நோக்கில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில், 64 ஆயிரம் லீற்றர் வரை எரிபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வளவு தொகை எரிபொருட்கள் பதுக்கி வைக்கப்படும் அளவுக்கு அந்த எரிபொருளானது, எரிபொருள் நிரப்பும் நிலையங்களை விட்டு எவ்வாறு வெளியே சென்றது? அதற்கு துணைபுரிந்த காரணிகள் யாவை? இவை தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். சாதாரணமாக எரிபொருள் பவுஸர் ஒன்று 6500 லீற்றர் கொள்ளக் கூடியதாக விளங்குகிறது. அப்படியிருக்கையில் 64 ஆயிரம் லீற்றர் வரை எரிபொருட்கள் பதுக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்படும் அளவுக்கு நிலைமை வளர்ச்சி பெற்றுள்ளது. இவ்வளவு தொகை எரிபொருட்கள் எத்தனை பவுஸர்களாக இருக்கும் என்பதை சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை.

தற்போது எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் எரிபொருளை விநியோகிக்கும் போதும், அதனைப் பெற்றுக் கொள்வதிலும் இடம்பெற்று வரும் ஒழுங்கீனங்களும் முறைகேடுகளும் அவை பதுக்கி வைக்கப்படுவதற்கு பெரிதும் உதவக் கூடியனவாக உள்ளன. இது பலரது கருத்தாக இருக்கின்றது.

அதனால் எரிபொருள் விநியோகத்தின் போதும் அதனைப் பெற்றுக் கொள்வதிலும் இடம்பெறும் முறைகேடுகளையும் ஒழுங்கீனங்களையும் கட்டுப்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம். அப்போதுதான் எரிபொருளை முறைகேடாகப் பெற்றுக் கொள்வதையும் அதிக விலைக்கு விற்பனை செய்யும் எதிர்பார்ப்பில் பதுக்கி வைப்பதையும் பெரும்பாலும் தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இந்த நிலையில் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் எரிபொருள் விநியோகத்திற்காக 'டோக்கன்' முறை அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இது ஒரு முன்னேற்றகர நடவடிக்கையாகக் கருதப்படுகின்றது. ஆனாலும் இந்த முறைமையைப் பயன்படுத்தியும் எரிபொருளை அடிப்படையாகக் கொண்ட முறைகேடுகளை மேற்கொள்ள முடியும் எனப் பலர் சுட்டிக் காட்டியுள்ளனர். இம்முறைமையின் கீழ் பல டோக்கன்களை ஒருவர் பெற்றுக் கொள்ள வாய்ப்பு காணப்படுகிறது. அத்தோடு 'டோக்கன்கள்' அதிக விலைக்கு விற்பனை செய்யப்படும் ஒன்றாகக் கூட சில சமயம் மாறி விடலாம் என்றும் அவ்வாறானவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் தற்போதைய சூழலில் எரிபொருள் விநியோகத்தில் இடம்பெறும் முறைகேடுகளையும் ஒழுங்கீனங்களையும் கட்டுப்படுத்த வேண்டிய தேவை பரவலாக உணரப்பட்டுள்ளது. அந்த வகையில் வாகனங்களின் இறுதி இலக்கத்தின் அடிப்படையில் எரிபொருட்களை விநியோகிக்கும் போது இவ்வாறான முறைகேடுகளை பெரும்பாலும் தவிர்த்துக் கொள்ள முடியும். அதாவது 'குறித்த இலக்கம் கொண்ட வாகனங்களுக்கு குறித்த நாளில் மாத்திரம்தான் எரிபொருள் வழங்கப்படும்' என்ற முறைமை அறிமுகப்படுத்தப்படும் போது அதன் விநியோகத்தில் இடம்பெறும் பெரும்பாலான முறைகேடுகளை தவிர்த்துக் கூடியதாக இருக்கும் என்ற கருத்தும் மக்கள் மத்தியில் காணப்படவே செய்கின்றது.

அதேநேரம் எரிபொருள் விநியோகம் மற்றும் பெற்றுக் கொள்ளலில் இடம்பெறும் ஒழுங்கீனங்களை தவிர்த்து அவை ஒழுங்குமுறையாக விநியோகிக்கப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முப்படையினரையும் பயன்படுத்தலாம். அதன் ஊடாக இங்கு இடம்பெறும் முறைகேடுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம் என்ற அபிப்பிராயமும் மக்கள் மத்தியில் காணப்படுகிறது. நாடு ஏற்கனவே கொவிட் 19 தொற்று அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்திருந்த காலப்பகுதியில் அத்தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசியை விரைவாகவும் வேகமாகவும் மக்களுக்கு ஒழுங்குமுறையாகப் பெற்றுக் கொடுத்து மக்களின் பாராட்டுக்களை பெற்றுக் கொண்ட பெருமையும் முப்படையினருக்கு உள்ளது.

ஆகவே எரிபொருள் விநியோகத்திலும் அதனைப் பெற்றுக் கொள்வதிலும் இடம்பெறுகின்ற முறைகேடுகளை கட்டுப்படுத்திக் கொள்வதில் அதிக கவனம் செலுத்துவது இன்றியமையாததாகும். அதன் ஊடாக எரிபொருளை பதுக்கும் முறைகேடுகளை தவிர்க்கவும் மக்கள் எரிபொருளுக்காக எதிர்கொள்ளும் அசௌகரியங்களை குறைத்து கட்டுப்படுத்திக் கொள்ளவும் முடியும்.

editor.tkn@lakehouse.lk

நலிவுற்ற மக்களின் உரிமைகளுக்காக போராடியவர் அமரர் ராஜநாயகம்

இலங்கையில் லங்கா சமசமாஜக் கட்சி 1935 இல் ஆரம்பமானதென்றால், அதற்கடுத்த ஆண்டில் 1936 இல் ராஜநாயகம் பிறந்தார். யாழ்ப்பாணத்தில் இடதுசாரி முற்போக்காளர்களில் ராஜநாயகம்(1936_2022) தனிநாயகமாகப் பிரகாசித்தார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரியில் ஒரேட்டர் சுப்ரமணியம், என்.எஸ்.கந்தையா போன்ற பெரியார்களின் கீழ் பயின்ற ராஜநாயகம் பாடசாலைக் காலத்திலேயே லங்கா சமசமாஜிகளின் கொள்கையில் ஆழ ஊன்றியிருந்தார். டொக்டர் என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர் டி சில்வா, பெர்னார்ட் சொய்சா போன்ற சமசமாஜிகளின் கீழ் அரசியல் பாடம் பயின்ற ராஜநாயகத்தின் ஊனில் உதிரத்தில் சமூக நீதி, அடிப்படை மனித உரிமை, ஜனநாயக விழுமியங்கள் என்பன செறிந்திருந்தன.

அரசியலின் எல்லாக் கட்டங்களிலும், மோசமான அடக்குமுறைக் காலங்களிலும், புலம்பெயர்ந்த லண்டன் வாழ்விலும் நீக்கமற நிறைந்திருந்த வன்முறை எச்சரிக்கை அச்சுறுத்தல் என்றாகிப் போன சூழலிலும் மனித உரிமையின் போர் முரசமாகவே அவர் ஒலித்திருக்கிறார். எங்கெல்லாம் அட்டூழியங்கள் தலைவிரித்தாடினவோ அங்கெல்லாம் அவரது பார்வை குவிந்தது.

அரசாங்க லிகித சேவையாளர் சங்கம் (GCSU)இலங்கை அரசியலின் திசை வழியையே தீர்மானிக்கும் முற்போக்கான சங்கமாக இருந்த காலத்தில் அதன் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு உழைத்த லங்கா சம சமாஜக் கட்சியின் அயராத தொண்டனாக பாடுபட்ட ராஜநாயகம் அக்கட்சி 1963 இல் தான் இது காலவரை கைக்கொண்டிருந்த உன்னத நோக்கங்களைக் கைகழுவிய போது, அக்கட்சியை விட்டு வெளியேறினார்.

1971 இல் ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது சிறைவைக்கப்பட்ட முக்கிய தலைவர்களுக்காக பால தம்போவின் கீழ், நீதிமன்றங்களில் வழக்காடிய ராஜநாயகம் இறுதிவரை அப்போர்க்குணத்தைக் கொண்டிருந்தார்.

குற்றவியல் சட்டத்தில் ஆழ்ந்த ஞானம் கொண்டிருந்த ராஜநாயகம், அத்துறையில் தொழில் பார்த்திருந்தால் பணமும் புகழும் கொண்ட வழக்கறிஞராகத் திகழ்ந்திருப்பார். அதே மாதிரி ஒரு வாய்ப்பு, லண்டனில் ஒரு கார்ப்பரேட் சட்ட நிறுவனத்திடமிருந்து வந்த போது, "அந்தத் தொழிலை நான் ஏற்றிருந்தால் Tamil Times பத்திரிகையை என்னால் கொண்டு வர முடியாது" என்று அந்த நல் வாய்ப்பைத் தூக்கிப் போட்டவர் ராஜநாயகம்.

தொழிற்சங்கவாதியாக புடம்போடப்பட்ட ராஜநாயகம் சமூகத்தில் வலுவற்ற கூட்டத்தின் உரிமைக்குரலாகவே விளங்கினார்.

மனித அழிவுகள் குறித்து மனம் நொந்தவர் ராஜநாயகம். அந்த மண்ணில் அனைத்து இன மக்களும் சம உரிமை படைத்தோராய், சமாதான வாழ்வு வாழ வேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருந்தவர் அவர்.

சந்திரிகா_ புலிகள் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து, மீண்டும் மோதல் வெடித்து, ஏழு வாரங்களில் இரு பக்கமும் 800 பேர் பலியான போது மனம் நொந்த ராஜநாயகம் The Art of the Possible என்ற தலைப்பில் ஓர் ஆசிரியர் தலையங்கம் எழுதியிருந்தார்.

எழுபதுகளில் இலங்கையில் அரசியல் நிலைமைகள் சீரழிந்து போய்க் கொண்டிருந்த காலகட்டத்தில்தான் ராஜநாயகம் லண்டன் வந்தார். எண்பதுகளில்

தமிழருக்கெதிரான ஒடுக்குமுறைகள் அதிகரித்த போது, அவர்களின் குரலை உலக அரங்கில் ஒலிக்கவும், இலங்கையில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை அறியும் ஆவலில் புலம்பெயர்ந்து உலகெங்கும் வாழும் இலங்கையர்களுக்காகவும் அவர் Tamil Times பத்திரிகையை நடத்தினார்.

இருபத்தைந்து ஆண்டுகள் தொடர்ச்சியாக அந்த மாதாந்த ஆங்கிலப் பத்திரிகை வெளிவந்தது பெருஞ் சாதனை தான். அமரர் என்.எஸ்.கந்தையாவின் நிர்வாகத்தில், ஓவியர் கே.கே.ராஜாவின் வடிவமைப்பில் அந்தப் பத்திரிகை வெளியாகி, என்.எஸ்.கந்தையாவின் மறைவுடன் அப்பத்திரிகை செயலிழந்தது துரதிர்ஷ்டமாகும். இலங்கை அரசியல் நூல்களைக் கொண்ட அரும் பெரும் நூலகத்தை அவர் கொண்டிருந்தார்.

இலங்கைப் பத்திரிகைச் செய்திகள் பற்றிய பெருஞ் செய்திக்கோவைகளை அவர் பேணியிருந்தார்.

மாற்றுக்கருத்தாளர்களின் மையமாக அவர் திகழ்ந்தார். ஒடுக்கப்பட்ட குரல்களை அவர் எப்போதும் மேடைகளில் பிரதிபலித்திருக்கிறார். அதிகாரபலம் கொண்டு திரிந்தவர்களின் அச்சுறுத்தலை அவர் எதிர்கொண்டார். ராஜநாயகத்தின் Tamil Times ஆசிரியர் தலையங்கங்கள் Sri Lanka Through Troubled Times என்ற தலைப்பில் இரண்டு தொகுதிகளாக சுமார் 750 பக்கங்களில் வெளியாகியுள்ளது. ராஜநாயகத்தின் ஏனைய ஆங்கிலக்கட்டுரைகளும் இன்னும் ஓராயிரம் பக்கங்களை உள்ளடக்கும். இனிய சுபாவமும் விருந்தோம்பும் பண்பும், தங்கு தடையற்ற உரையாடலும் நகைச்சுவையுணர்வும், நறுக்கென்ற பதிலும் அவரின் முத்திரைகள்.

ஒரு முற்போக்கு மனிதரின், இலட்சிய உள்ளத்தின் மறைவு உலகின் உன்னதமொன்றை பறித்துச் சென்ற உணர்வை அவரை அறிந்தவர்களின் நெஞ்சில் என்றும் பொறித்திருக்கும்.

மு.நித்தியானந்தன்

சேதனப் பசளை வீட்டுத் தோட்டத்தை ஊக்குவிக்கும் எஸென்ட் திட்டம்

சுற்றாடல் மற்றும் போசாக்கு அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக சமூகத்திற்கு உதவுதல் (எஸென்ட்) திட்டத்தின் மூலம் போஷாக்கான வீட்டுத் தோட்டம் தொடர்பான கையேடு ஒன்றை வெளியிடும் நிகழ்வு கடந்த 27ஆம் திகதி விவசாய சேவைகள் திணைக்களத்தில், விவசாய சேவைகள் ஆணையாளர் ஜெனரல் ஏ .எச்.எம்.எல் அபேரத்ன தலைமையில் நடைபெற்றது. இந்த கையேடு எட்ரா ஸ்ரீலங்காவின் முகநூல் பக்கத்தின் ஊடாகவும் பொதுமக்களுக்காக வெளியிடப்பட்டுள்ளது.

ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் தோட்ட மற்றும் கிராமிய மக்களின் நீர், ஆரோக்கியம், சுகாதாரம் மற்றும் போசணையை மேம்படுத்தும் நோக்கத்தில் எட்ரா ஸ்ரீலங்கா மற்றும் ஒக்ஸ்பாம் ஸ்ரீலங்கா இணைந்து செயல்படுத்தும் எஸென்ட் திட்டம் ஐரோப்பிய யூனியனால் நிதி வழங்கப்படும் திட்டமாகும்.

இத்திட்டத்தின் கீழ் மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் குடும்ப போசாக்கு நிலைமையை அதிகரிப்பதற்காகவும் மற்றும் இந்த மக்களுக்கிடையே காணப்படும் மந்த போசணையை குறைக்கும் நோக்கத்துக்காகவும் 1500 வீட்டு தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத் திட்டத்தின் மூலம் சேதன வீட்டுத்தோட்ட பயிர்ச் செய்கைக்கு பயிற்சி அளிக்கப்படுவதோடு அதன் பயனாளர்களுக்கு தொடர்ந்தும் ஆலோசனைகள் மற்றும் பயிர்விதைகளை வழங்குவதன் மூலம் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.

இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட மாவட்டங்களில் மிகவும் வெற்றியளித்துள்ளது. மேலதிக உற்பத்தி, விற்பனை மூலம் குறிப்பிட்டளவு வருமானத்தை பெறக் கூடியதாக இருந்ததாகவும், கொவிட்19 தொற்று அதிகமாக காணப்பட்ட வேளையில் தங்களது உணவுத் தேவையை நிறைவேற்றிக் கொள்ள கூடியதாக இருந்ததாகவும் இத்திட்டத்தின் பயனாளர்கள் தெரிவித்துள்ளார்கள். வீட்டுத் தோட்டம் என்பது முன்னெப்போதையும் விட உணவு பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல் வாழ்வை மேம்படுத்தும் பிரவேசமாகும்.

இத்திட்டத்தின் பயிற்சிகள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறை மற்றும் தத்துவார்த்த அறிவை பயன்படுத்தி 'போஷாக்குமிக்க வீட்டுத் தோட்டம்' தயாரிக்கப்பட்டுள்ளது. தங்களது வீட்டுத் தோட்டத்திலுள்ள இடத்தைப் பயன்படுத்தி சேதனப் பசளை வீட்டுத் தோட்டம் ஒன்றை ஆரம்பித்து நடத்துதல், சேதனப் பசளை மற்றும் கிருமிநாசினி உற்பத்தி, பாரம்பரிய விவசாய முறைகள் உள்ளிட்ட வீட்டுத் தோட்டம் மூலம் போஷாக்கு மற்றும் பொருளாதார ரீதியாக நன்மை பெற்றுக் கொள்ளக் கூடிய விதம் தொடர்பான தகவல்கள் இப்புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இப்புத்தகத்தை தற்போது adra srilanka.org/nhgis முகவரி மூலம் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

தென்கிழக்கு பல்கலைக்கழக மெய்யியல் துறை பேராசிரியராக ஐ.எல்.எம். மாஹிர் பதவியுயர்வு

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் மெய்யியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரான மருதமுனையை சேர்ந்த கலாநிதி ஐ.எல்.எம் மாஹிர் அப் பல்கலைக்கழகத்தின் மெய்யியல் துறை பேராசிரியராக பதவியுயர்வு பெற்றுள்ளார். பல்கலைக்கழகத்தில் 2022.06.25 ஆம் திகதி நடைபெற்ற பல்கலைக்கழக பேரவைக் கூட்டத்தின் தீர்மானத்துக்கமைய 09.11.2020 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இவர் பேராசிரியராக பதவியுயர்வு பெற்றுள்ளார்.

மருதமுனையை பிறப்பிடமாகக் கொண்ட இவர், தனது பாடசாலைக் கல்வியை மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியிலும் (தேசிய பாடசாலை), உயர்கல்வியை பேராதனைப் பல்கலைக் கழகத்தில் மெய்யியல் விஷேட துறையிலும் பெற்றுக் கொண்டார். யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் முதுதத்துவமாணி பட்டத்தையும் கலாநிதி பட்டத்தையும் இவர் நிறைவு செய்துள்ளார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் 2016 தொடக்கம் 2019 காலம் வரை சமூக விஞ்ஞானத் துறையின் தலைவராகவும் மற்றும் இப்பல்கலைக்கழகத்தின் பல்வேறு பதவிகளையும் வகித்துள்ள இவர் உளவியல், மெய்யியல் துறைகளில் தனது ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதோடு பல தேசிய, சர்வதேச ஆய்வு மாநாடுகளிலும் பங்குபற்றி தனது ஆய்வுகளை சமர்ப்பித்துள்ளார். துறை சார்ந்த பல நூல்களையும் அவர் எழுதியுள்ளார்.

சமூக செயற்பாடுகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள இவர், சுனாமி அனர்த்தத்திற்கு பின்னர் பெரியநீலாவணை மஸ்ஜிதுல் ஹுதா பள்ளிவாசல் செயலாளராக செயற்பட்டு சிறப்பான சேவைகளை மேற்கொண்டுள்ளார்.

தற்போது மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் ஜூம்ஆ பள்ளிவாசலின் (Grand Mosque) தலைவராகவும் பெரிய நீலாவணை சமூக அபிவிருத்தி ஸ்தாபனத்தின் ஆலோசகராகவும், மருதமுனை வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு உறுப்பினராகவும் செயற்பட்டு வருகிறார்.

இவர் சமூக அமைப்புக்களிலும் தனது பங்களிப்புக்களை செய்து வருகிறார். இவர் மருதமுனையை சேர்ந்த இஸ்மா லெப்பை மற்றும் ஆயிஷா உம்மாவின் புதல்வராவார்.

ஏ.எல்.எம்.ஷினாஸ்
(பெரியநீலாவணை விசேட நிருபர்)

திக்கம் கலாசார மண்டபத்தில் சேக்கிழார் பெருமான் குருபூஜை

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டிலே (2022) இளம் இந்துச் சிறார்களிடையே நாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக, யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும்' கனடா ரொன்ரோவை வதிவிடமாகக் கொண்ட சிவஸ்ரீ பால. திருகுணானந்தக்குருக்கள் அனுசரணையுடன் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் நடைபெறுகின்றன.

'சேக்கிழார் பெருமான் குருபூஜை' நிகழ்வு திக்கம் கலாசார மண்டபத்தில் 26.06.2022 காலை இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி கிருஷ்ணகுமாரி சிவானந்தன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சுகன்யா அரவிந்தன் பிரதம விருந்தினராகவும் , அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் தலைவர் சி.கா. கமலநாதன் சிறப்பு விருந்தினராகவும் இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி மா.அனந்தலட்சுமி கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

சேக்கிழார் பெருமான் குருபூஜை, நாவலர் குருபூஜை மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து,

'சேக்கிழாரின் பணி சைவத்தின் நிலைப்பு' எனும் தொனிப்பொருளில் இளம்சைவப்புலவர் நித்தியபாபுதரன் வழங்கிய சிறப்புச்சொற்பொழிவு இடம் பெற்றது. சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து கௌரவ விருந்தினர் உரை, அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள், சிறப்பு விருந்தினர் உரை, பிரதம விருந்தினர் உரை ஆகியவற்றையடுத்து குருபூஜையை முன்னிட்டு நடத்தப்பட்ட இந்துசமயப் பொது அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

பொலிகை விநாயகர் அறநெறி பாடசாலை, திக்கம் மடத்துவாசல் சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை,

மருதாம்புலம் பத்திரகாளி அம்பாள் அறநெறிப் பாடசாலை ஆகியவை பங்கேற்றிருந்தன.

அ. கனகசூரியர்

இராணுவத்தினரால் 16 பண்ணைகளில் 1063 ஏக்கரில் பசுமை விவசாயச் செய்கை

இலங்கை இராணுவத்தின் தேசிய மற்றும் தற்போதைய முக்கியத்துவம் வாய்ந்த திட்டமாக பசுமை விவசாயத்தை மேம்படுத்தும் திட்டம் விளங்குகின்றது. இலங்கை இராணுவத்தின் பசுமை விவசாய செயற்பாட்டு குழுவினை இராணுவத் தளபதி லெப்டினன்ற் ஜெனரல் விக்கும் லியனகே அண்மையில் ஆரம்பித்து வைத்தார்.

உணவு உற்பத்தியை அதிகரிக்கும் முயற்சியில் இராணுவத்தினர் முழுமையான பங்களிப்பு

இலங்கை இராணுவ விவசாயம், கால்நடை பணிப்பகம் மற்றும் இலங்கை இராணுவ விவசாய மற்றும் கால்நடை படையணியினால் நாடளாவிய ரீதியில் 16 இராணுவப் பண்ணைகளில் விவசாயம் மேற்கொள்ளப்படுகின்றது. 1063 ஏக்கர் நிலப்பரப்பில் அரசுக்குச் சொந்தமான விவசாயம் மேற்கொள்ளப்படாத நிலப்பரப்பில் விவசாயம் மேற்கொள்வதற்கான நடவடிக்கையினை இலங்கை இராணுவம் ஆரம்பித்துள்ளது.

இதன்படி, இராணுவத் தளபதி லெப்டினன்ற் ஜெனரல் விக்கும் லியனகே அவர்களின் வழிகாட்டல் மற்றும் பூரண மேற்பார்வையின் கீழ், இலங்கையில் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் இராணுவம் விவசாயத் துறை நிபுணர்கள் மற்றும் விவசாயத் துறையில் அறிவு மிக்க அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றி வருகிறது.

இதன் முதற்கட்டமாக 500 ஏக்கர் நிலப்பரப்பில் சோளப்பயிர் செய்கையை இலங்கை இராணுவம் ஆரம்பித்துள்ளது. அதன்படி தம்புத்தேகம நிரவிய இராணுவப் பண்ணையில் 100 ஏக்கர் சோளச் செய்கையை ஆரம்பிப்பதற்கு நேற்றுமுன்தினம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கை இராணுவத்தின் பதவி நிலைப் பிரதானி மேஜர் ஜெனரல் ஜகத் கொடித்துவக்கு மற்றும் இராணுவ சிரேஷ்ட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

தேசத்தின் பாதுகாவலர்களாக, இலங்கை இராணுவம் இன்றைய இலங்கையின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் தனது முழுப் பங்களிப்பையும் வழங்கி வருவதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

கப்டன் வா சுதர்ஸ்சன்...✍

பொருளாதார நெருக்கடியை பயன்படுத்தி கொள்ளை இலாபமீட்டும் வர்த்தகர்கள்!

நாட்டில் பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள். பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொள்ள மக்கள் நாட்கணக்கில் நீண்ட வரிசையில் நிற்க

மலையக மக்களின் வேதனை இது!

வேண்டியுள்ளது. உரிய பகீர் வீட்டு முறைமை இல்லாததன் காரணமாகவும், அத்தியாவசியப் பொருட்கள் கொண்டு வரப்படும் நாள் பற்றிய சரியான விளக்கங்கள் இல்லாதவன் காரணமாகவும் மக்கள் இவ்வாறு வரிசையில் நிற்க வேண்டியுள்ளது. நீண்ட நேரம் வரிசையில் நிற்கும் மக்கள் ஆத்திரமடைந்து வீதிகளை மறித்து போராட்டங்களிலும் ஈடுப்பட்டு வருகின்றனர். இதனால் வீதியில் செல்லும் மக்களும் அன்றாடம் பாதிப்புக்குள்ளாகின்றனர். தொழில் துறைகள் கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பல துறைகள் பாதிப்படைகின்றன. மக்கள் பிரதிநிதிகள் சிலர் மக்களின் தேவை எவையென்று அறியாது மக்களுக்கு சமையல் பாத்திரங்களை வழங்கி தங்களது அரசியல் இருப்பைப் பாதுகாக்கும் வகையில் செயற்படுகின்றனர்.

மலையகத்தைப் பொறுத்தவரை இன்று பொதுமக்கள் மண்ணெண்ணெய், பெட்ரோல், டீசல், வீட்டு சமையல் எரிவாயு, அரிசி, பருப்பு, சீனி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கான நாளாந்தம் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இது இவ்வாறிருக்க 'ஊர் ரெண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்பதுபோல ஒரு சில சுயநல அதிகாரிகள் பணம் உழைக்கும் காரியத்தில் ஈடுபடுகின்றனர்.

வியாபாரிகள் பலர் பொருட்களை பதுக்கி வைத்து கொள்ளை இலாபம் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அதிகாரிகளோ மக்கள் படும் அவலங்களை கண்டும் காணாதது போல் இருந்து விடுகின்றனர். இதனால் வறிய மக்கள் விரக்தியிலும் துன்பத்திலும் உள்ளனர்.

கே. சுந்தரலிங்கம்...✍
(ஹட்டன் விசேட நிருபர்)

பெண்களை விட ஆண்களையே அதிகம் தாக்கும் 'லீஷ்மேனியசின்' தொற்றுநோய்!

மணல் வண்டுகளால் பரவுகின்ற 'லீஷ்மேனியசின்' தொற்றுநோய் வடமத்திய மாகாணத்தில் பலருக்கு ஏற்பட்டுள்ளதாக அனுராதபுரம் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக சிரேஷ்ட வைத்திய அதிகாரி ஹேமா வீரக்கோன் தெரிவித்தார்.

அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் இத்தொற்றுவியாதி ஏராளமாக பதிவாகியுள்ளது. 2010 முதல் 2015 மற்றும் 2020 இல் அதிக எண்ணிக்கையிலான எநோயாளிகள் அனுராதபுரம் மாவட்டத்தில் பதிவாகியுள்ளதுடன் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 2016 முதல் 2019 வரை அதிகளவிலான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கொரோனா அச்சுறுத்தலுக்கு முன்னரான கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இந்நோய்த் தாக்கம் குறைவாக இருந்துள்ளது. ஆனால் தற்போது 2021 இல் இருந்ததை விட இரண்டு மடங்கு நோயாளிகள் அனுராதபுரம் மாவட்ட போதனா வைத்தியசாலையில் பதிவாகியுள்ளனர். அனுராதபுரம் மாவட்டத்தில் அதிகளவிலான லீஷ்மேனியசின் நோயாளர்கள் பதவிய மற்றும் தலாவ ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இனங்காணப்பட்டுள்ளனர். நாச்சியாதீவு, மத்திய நுவரகம் பிரதேச சுகாதார பிரிவுகளிலும் அதிகமான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

தற்போது தம்புத்தேகம, நொச்சியாகம, இராஜாங்கனை, இபலோகம மற்றும் மதவாச்சி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் அதிகளவிலான நோயாளர்கள் காணப்படுகிறனர். இலங்கையில் லீஸ்மேனியசின் நோயைச் சேர்ந்த அறிகுறிகள் கண்டறியப்பட்ட மாவட்டங்களில் அநுராதபுரம் மாவட்டமும் ஒன்றாகும். ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அதிகளவிலான நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன் மாத்தறை குருநாகல் மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களிலும் நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இலங்கையில் மணல் ஈக்களை சகல மாவட்டங்களிலும் காணக் கூடியதாகவுள்ளது. இந்த இனங்களில் மிகவும் பொதுவானது ப்ளிபோடமஸ் அர்ஜென்டிஸ் (Phiebitomus Argetipus) என்ற வண்டு இனமாகும். இது முள்ளந்தண்டுள்ள உயிரினங்களில் இரத்தத்தை உறுஞ்சுவதன் மூலம் நோய் பரவுகின்றது. இது சுமார் 2 தொடக்கம் 3 மிமீ நீளமுள்ள அடர் பழுப்பு நிற பூச்சியாகும். வாழை மரம், மானா புதர்கள்,தேக்கு மரங்கள் ஏராளமாக உள்ள பிரதேசங்களில் இவைகள் அதிகளவில் வாழ்கின்றன. ஈரமான நிலத்தடி நீர்நிலைகள் மற்றும் இருண்ட சூழலில், குப்பை சேகரிக்கும் இடங்களில் அவற்றைக் காணக் கூடியதாக இருக்கும். அது குத்திய இரண்டு வாரங்கள் முதல் சில மாதங்கள் வரை தோலில் சிவப்பு புள்ளிகள் காணப்படும்.முகம் , கழுத்து கைகள் மற்றும் கால்கள் போன்ற உடலில் வெளிப்படும் பகுதிகளில் மிகவும் பொதுவாக இந்த தழும்புகளைக் காணக் கூடியதாக இருக்கும். ஆனால் பாதிக்கப்பட்டவரின் உடல் முழுவதும் தொற்று காணப்படும்.இது ஒரு கட்டியாகக் கூட இருக்கலாம். வலி அல்லது அரிப்பு இல்லாதது. இந்த புடைப்புக்கள் காயங்களின் அறிகுறியாகும். சிகிச்சை தாமதமானால் சிதைந்த வடுக்கள் உருவாகலாம். லீஸ்மேனியசின் நோயாளிகளிடம் நடத்தப்பட்ட தொற்று நோயியல் ஆய்வில் பெண்களை விட ஆண்களுக்கே இந்நோய் அதிகமாகக் காணப்படுவதாக தெரியவந்துள்ளது. இது எல்லா வயதினருக்கும் தொற்றக் கூடியதாக உள்ளது. 20 தொடக்கம் 40 வயதிற்குட்பட்ட பெரும்பாலான மக்களை பாதிக்கலாம். அறிகுறிகள் தென்பட்டவுடன் அருகில் உள்ள அரச மருத்துவமனைக்கு செல்ல வேண்டும். மருத்துவ மனையில் முறையான சிகிச்சை மூலம் நோயை குணப்படுத்த முடியும். பருக்களை அகற்றி முழுமையாக குணமாக்குவது அவசியம் எனவும் வைத்தியர் தெரிவித்தார்.

வடமத்திய மாகாணத்தில் பரவுகிறது; மருத்துவ சிகிச்சையை நாடினால் முழுமையாகக் குணப்படுத்தலாம்

லீஷ்மேனியசின் என்பது உலகில் ஒன்பதாவது பொதுவான தொற்று நோயாகும். தற்போது உலகில் மிகவும் பரவலாக உள்ளது. உலக மக்கள் தொகையில் உலகம் முழுவதும் இதுவரை சுமார் 350 மில்லியன் மக்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 20000 முதல் 30000 நோயாளிகள் உயிரிழந்துள்ளனர். 1992 இல் இலங்கையில் முதலாவது லீஷ்மேனியசின் நோயாளர் அம்பாந்தோட்டை பகுதியில் பதிவாகியதுடன் 2008 செப்டம்பர் மாதம் இலங்கையில் இந்நோய் அறிவிக்கப்பட வேண்டிய நோய் என்று பெயரிடப்பட்டது என்றும் வைத்தியர் ஹேமா வீரகோன் மேலும் தெரிவித்தார்.

மதார் தம்பி ஆரிப்...✍
(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

'விக்ரம்' புயலினால் வீசப்பட்ட ரஜனி!

விக்ரம் படம் வெளியான பின்னர் ரஜினி காந்த் மிகவும் குழப்பத்தில் உள்ளார். விக்ரம் படத்தின் இமாலய வெற்றியானது ரஜினிக்கு தோல்வி மனப்பான்மையை ஏற்படுத்தியுள்ளது. ரஜினி சமீப காலமாக தனது பழைய படங்களை மீண்டும் விளம்பரப்படுத்துவதும் அப்படக்குழுவினரை சந்திப்பதும் என வேகம் காட்டுகிறார். அதாவது ரஜினி தனது இருப்பை தக்க வைத்துக்கொள்ள முயல்கிறாரா என்கிற கேள்வி சினிமா வட்டாரத்தில் எழுந்துள்ளது.

'அண்ணாமலை' 30 ஆவது ஆண்டு விழாவை நேற்றுமுன்தினம் ரஜினி திரும்பிப் பார்த்துள்ளார். இது திரைத்துறையினருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. 'பாபா' படம் தோல்வியடைந்ததும் ரஜினி 'சந்திரமுகி' படத்துக்கு கோல்ஷீட் கொடுத்தார். "படத்தில் நடிக்க வடிவேலுவைப் பண்ணுங்கள்" என்று கேட்டுக் கொண்டார். படத்தில் ரஜினியின் வழக்கமான கதை இல்லாவிட்டாலும் பாடல்கள், நகைச்சுவைக் காட்சிகளால் படம் வெற்றியடைந்தது.

பொதுவாக வெற்றி, தோல்விகள் பற்றி அதிகம் பேசாத ரஜினி 'அண்ணாமலை' விழாவில் பேசிய வார்த்தைகள் அவர் எவ்வளவு மனதளவில் பாதிக்கப்பட்டிருந்தார் என்பதை வெளிப்படுத்தின. ரஜினி அரசியலில் தப்புக் கணக்கு போட்டிருக்கலாம். ஆனால் சினிமாவில் என்றுமே அவர் கணக்கு தப்பிப் போனது கிடையாது. ராஜசேகர் தொடங்கி சுரேஷ் கிருஷ்ணா, ஆர்.வி.உதயகுமார், கே.எஸ்.ரவிகுமார், ஷங்கர், பா.ரஞ்சித், கார்த்திக் சுப்புராஜ், சிறுத்தை சிவா, தற்போது நெல்சன் என காலத்துக்கு ஏற்றாற் போல் இயக்குநர்களை தெரிவு செய்வது அதில் வெற்றியும் காண்பது ரஜினியின் வழக்கம். எந்த பெரிய நிறுவனமும் இவரை வைத்து தைரியமாக படம் பண்ணி இலாபம் பார்க்க தயங்குவதில்லை. எம்ஜிஆருக்கு அடுத்த முடிசூடா மன்னன் ரஜினி. அதேபோல் தனது வெற்றிக்கான

மனதளவில் பாதிக்கப்பட்டதால், கமல் படத்தை முறியடிக்கும் திரைப்படத்தைத் தயாரிப்பதில் பிரயத்தனம்

ஆட்கள், தனது பலத்துக்கேற்ற படம் தயாரிக்கும் நிறுவனம், இயக்குநர் என தெரிவு செய்வதில் ரஜினி தேர்ந்த மனிதர். 70 வயதிலும் முன்னணியில் மூச்சிரைக்காமல் ஓடும் குதிரை அவர். ஆனாலும் விக்ரம் வெற்றியானது ரஜினியை மனதளவில் பாதித்துள்ளது. கமலின் வெற்றியானது தன்னை ஓரங்கட்டி விட்டதென்றே அவர் கருதுகின்றார். கமல் கொடுத்த 'மெகா ஹிட்' விக்ரம் திரைப்படம் ரஜினியை பின்தள்ளி விட்டதென்பதே உண்மை. தற்போது என்னவென்றால் ரஜினிக்கு பிரச்சினை ஆரம்பித்துவிட்டது. 'இமேஜ்' பற்றி கவலைப்படாத ரஜினி இப்போது கவலையில் உள்ளார்.

தரமான படத்தை கொடுக்கும் முனைப்பில் இருக்கிறார் ரஜினி. கே.எஸ்.ரவிகுமார், பொன் குமரன் ஆகியோரை சேர்த்து கதையை வலுவாக்க சொல்லியிருக்கிறார். படத்தின் மீது அக்கறை காட்டும் அதே நேரம் பூக்கடைக்கு விளம்பரம் தேவைப்படாத ரஜினியே தற்போது தனது பழைய படங்களின் வெற்றி நாட்களை நினைவுகூரும் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டவர்களுடன் போட்டோ எடுப்பது போன்ற விடயங்களில் ஈடுபடுகின்றார்.

லெபனான் இலங்கைத் தூதுவர், இலங்கை அமைதி காக்கும் படையினரை பார்வையிட்டார்

லெபனானிலுள்ள ஐக்கிய நாடுகளின் இடைக்காலப் படையின் தூதுவர் மற்றும் படைத் தளபதி மேஜர் ஜெனரல் அரோல்டோ லாசாரோவை மரியாதை நிமித்தம் சந்தித்த லெபனானுக்கான இலங்கைத் தூதுவர், இலங்கை அமைதி காக்கும் படையினரை பார்வையிட்டார்

லெபனானுக்கான இலங்கைத் தூதுவர் ஷானி கல்யானரத்ன கருணாரத்ன கடந்த 21ஆம் திகதி லெபனானில் உள்ள ப்ளூ லைனிலுள்ள ஐக்கிய நாடுகளின் இடைக்காலப் படையின் தலைமையகத்தில் தூதுவர் மற்றும் படைத் தளபதி மேஜர் ஜெனரல் அரோல்டோ லாசாரோவை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.

லெபனானிலுள்ள ஐக்கிய நாடுகளின் இடைக்காலப் படையில் இலங்கைப் படைகளை அதிகரித்தல் உள்ளிட்ட பரஸ்பர நலன்கள் குறித்து அவர்கள் கலந்துரையாடினர்.

ஐக்கிய நாடுகளின் இடைக்காலப் படையினரின் சிறந்த நிபுணத்துவத்திற்கே மதிப்பளிக்கப்படுவதாகவும், கடந்த 11 வருடங்களாக லெபனானிலுள்ள ஐக்கிய நாடுகளின் இடைக்காலப் படைக்கு அவர்கள் ஆற்றிய பங்களிப்புக்காக நன்றி தெரிவிப்பதாகவும் படைத் தளபதி தெரிவித்தார்.

13ஆவது படை பாதுகாப்பு நிறுவனத்தின் (லெபனானில் உள்ள ஐக்கிய நாடுகளின் இடைக்காலப் படை) இலங்கை லெப்டினன்ட் கேணல் நயன் சமரகோன் மற்றும் தூதரகத்தின் இணைப்பாளர் (நிர்வாகம்) பிரியந்த தசநாயக்க ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

தூதுவருக்கு கௌரவ பாதுகாப்பு வழங்கப்பட்டதுடன், படையினர் மற்றும் கவச வாகனங்கள் ஆய்வு செய்யப்பட்டன. இலங்கை இராணுவ கலிப்சோ இசைக்குழுவின் கே9 அணிவகுப்பு மற்றும் இசை நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

பஸ் கட்டணம் 30 சத வீதத்தால்...

ஜூலை 01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் பஸ் கட்டணங்கள் 30 வீதத்தால் அதிகரிக்கப்படும் என சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில், 40 ரூபாவை ஆக குறைந்தபட்ச பஸ் கட்டணமாக அதிகரித்துள்ளதாக, அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து பஸ் கட்டணத்தை அதிகரிப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடப்பு கூ. கிராமிய... 03ஆம் பக்கத் தொடர்

மேலதிக விசாரணைகளை செய்து வருவதாகவும் உடப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். அத்துடன் வங்கியிலும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எம்.பிக்கள் பாராளுமன்றில்... 03ஆம் பக்கத் தொடர்

எதிர்நோக்கி வரும் நிலையில் சரியான புரிந்துணர்வை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியது ஊடகவியலாளர்களின் பொறுப்பாகும் என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றும் உறுப்பினர்களின் அநாவசிய பேச்சுக்கு பாராளுமன்ற ஊடகவியலாளர்கள் முக்கியத்துவம் வழங்கக் கூடாது. அவ்வாறு வழங்கும் போது தான் நாடும் குழப்பமடைந்து மக்களும் குழப்பமடைய நேர்கிறது.

1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் 14 பாராளுமன்ற உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். 80 பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன . எனது வீடும் எரிந்தது. குழந்தையின் பால் போத்தல் மட்டுமே மிஞ்சியது. அவ்வாறு செய்தால் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?

நாட்டில் அனைத்துக்கும் அடிப்படையாக உள்ளது அரசியலமைப்பு. அரசியலமைப்பு பாதுகாக்கப்படும் இந்த நாட்டின் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும். எமது கடமை முடிந்து விடலாம் எனினும் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும். நாம் பாதுகாக்க வேண்டிய ஜனநாயகம் தொடர்பில் எமக்கு பயம் ஏற்பட்டுள்ளது. எல்லோரதும் தவறு உள்ளது. அந்த தவறு நாடு மற்றும் சமூக முன்னேற்றத்துக்கு உதவும் வகையில் மாற்றப்பட வேண்டும்.

பாராளுமன்ற ஊடகவியலாளர்களுக்கு பெரும் பொறுப்பு உள்ளது. நாட்டை பாதுகாக்கும் பொறுப்பு உள்ளது. அரசியல் தலைவர்கள் நூற்றுக்கு நூறு வீதம் சரியாக செயல்படுவதில்லை சிலர் சரியாக செயல்படுகின்றனர்.இங்கு மட்டுமல்ல உலகில் எங்கும் அப்படித்தான் நடக்கிறது. அதிகளவு நன்மை செய்பவர்களை பலப்படுத்தி தைரியப்படுத்த வேண்டும் அதுவே நாம் செய்ய வேண்டியதாகும் என்று சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்ற செயலாளர் நாயகம் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்ட இந்த கருத்தரங்கில் அச்சு ஊடகம் மற்றும் இல்லத்திரனியல் ஊடக நிறுவனங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்களும் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

விமான நிலையம் செல்ல... 03ஆம் பக்கத் தொடர்

தனது பாதுகாப்பு கையிருப்பிலிருந்து அவர்களது தேவையை பூர்த்தி செய்ய முன்வந்துள்ளார். ரஷ்ய சுற்றுலாப்பயணி அவரது சேவை குறித்து திருப்தி தெரிவித்ததுடன், இது குறித்து தூதரகங்களுக்கும் அறிவிப்பதாக கூறினார்.

இலங்கை மக்கள் மிகவும் கடினமான சூழ்நிலையில் இருப்பதாகவும், தங்கள் நாட்டு அதிகாரிகளுக்கு தெரிவித்து, இலங்கைக்கு எரிபொருளை வழங்குவதற்கு உதவுமாறும் ரஷ்ய சுற்றுலா பயணிகளிடம் எரிபொருள் நிலையத்தினர் தெரிவித்தனர். இந்த வெளிநாட்டு சுற்றுலா பயணியும் நாட்டின் நிலைமை குறித்து வருத்தம் தெரிவித்து நெகிழ்ச்சியுடன் வெளியேறினார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில்... 03ஆம் பக்கத் தொடர்

மருத்துவர் சிவபிரகாசம் அனுஷ்யந்தன், ஐயம்பிள்ளை இராசரத்தினம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டார்கள். தலைவராக சட்டத்தரணி நடராஜர் காண்டீபன், துணைத்தலைவர்களாக, மா.கணபதிப்பிள்ளை, சட்டத்தரணி திருமதி ஜெயந்திவி நோதன், மருத்துவர் தி.ஞானசேகரன், பொதுச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி, உதவிச் செயலாளர், திருமதி லீலாவதி மோகனசுந்தரம், நிதிச் செயலாளர், செல்லத்துரை திருச்செல்வன், உதவி நிதிச்செயலாளர், கோபாலபிள்ளை பரமானந்தன், நூலகக்குழுச் செயலாளர் க.குமரன், இலக்கியக்குழுச் செயலாளர் சட்டத்தரணி திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா, கல்விக் குழுச் செயலாளர் சண்முகம் இந்திரகுமார், நிலையமைப்புக்குழுச் செயலாளர் மா.தேவராசா, உறுப்புரிமைக்குழுச் செயலாளர் கி.பொன்னுத்துரை, நிர்வாகக்குழு உறுப்பினர்கள் கனகசபை சுந்தரேசன், சட்டத்தரணி ஜி.இராஜகுலேந்திரா, திருமதி பவானிமுகுந்தன், தெ.மதுசூதனன், கதிரவேலு மகாதேவா, அமிர்தநாயகம் நிக்சன், க.செந்தில்குமார், திருமதி.வளர்மதி சுமாதரன், செ.மனோகரன், மருத்துவர் உமாபதி ஸ்ரீசங்கர், ஆ.இரகுபதிபாலசிறீதரன், வேலுப்பிள்ளை இளஞ்செழியன், திருமதி.மிதிலைச்செல்வி ஸ்ரீபத்மநாதன், சங்கரப்பிள்ளை பாலேஸ்வரன், உள்ளகக் கணக்காய்வாளர்கள் சி.மாணிக்கராசா, தி.ஜெயசீலன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டார்கள்.

கட்சி தீர்மானத்துக்கு எதிராக...

அதன் தீர்மானங்களுக்கு எதிராகவும் முஷாரப் எம்பி செயற்பட்டார் என்று தெரிவித்து கட்சியில் இருந்து நீக்கப்பட்டிருந்தார்.

மக்கள் காங்கிரஸ் கட்சியானது முஷாரப் எம்பியை கட்சியிலிருந்து நீக்கியமை தொடர்பாக இம் மாதம் முதலாம் திகதி பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கும் தேர்தல் ஆணையாளருக்கும் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு அறிவித்த திகதியிலிருந்து ஒருமாத காலத்தினுள் அந்நீக்கத்திற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யக் கூடிய உரிமை பாராளுமன்ற உறுப்பினருக்கு அரசியலமைப்பின் பிரகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. கட்சி உறுப்புரிமை நீக்கம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் தன்னை கட்சியிலிருந்து நீக்கியமை நீதிக்கு முரணானது என்ற அடிப்படையில் தனது மனுவை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். அவர் சார்பாக சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா ஆஜராகியமை குறிப்பிடத்தக்கது.

18,000 தனியார் பஸ்கள்...

பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவிக்கையில், அதிகரித்த எரிபொருள் விலையுடன் ஒப்பிடும் போது பஸ் கட்டணத்தை 35 முதல் 47 வீதம் வரை அதிகரிக்க வேண்டும். இதன்படி தற்போது குறைந்தபட்சமாக 32 ரூபாவாக உள்ள கட்டணத்தை 40 ரூபாவாக அதிகரிக்க வேண்டும் என்றார்.

குனூத்துன்னாஸிலாவை ஒதுமாறு...

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா பொதுச் செயலாளர் அஷ்ஷைக் எம். அர்கம் நூராமித்தும் ஃபத்வாக் குழுச்செயலாளர் அஷ்ஷைக் எம்.எல்.எம் இல்யாஸ் ஆகியோர் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, 'எமது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியான இந்நிலையில் நாளாந்தம் பொருட்களின் விலைகள் அதிகரித்து வருவதுடன் மக்கள் அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதில் பெரிதும் சிரமப்படுவதை நாம் கண்கூடாக காண்கின்றோம்.

இவ்வாறான நெருக்கடியான சோதனைகள் ஏற்படும்போது அல்லாஹ்வின் அடியார்களாகிய நாம் அவன் பக்கம் திரும்ப வேண்டும். இச்சோதனைகள் நீங்குவதற்காக தொழுகை, நோன்பு, சதக்கா, திக்ர், தௌபா, இஸ்திஃபார், துஆ போன்ற நல்லமல்கள் மூலம் அல்லாஹ்வின் பக்கம் நாம் நெருங்க வேண்டும்.

துஆ என்பது ஒரு வணக்கம் என்பதுடன், கஷ்ட நஷ்டங்களை அல்லாஹ்விடம் முறையிட்டு அதற்கான பரிகாரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஓர் ஆயுதமுமாகும். எனவே இதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். பொதுவான சோதனைகளின் போது தொழுகைகளில் குனூத்துன்னாஸிலா ஓதுவது சுன்னத்தாகும் என மார்க்க அறிஞர்கள் கூறுகின்றனர். இதனை அடிப்படையாக வைத்து தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நீங்கி நல்ல நிலைமை உண்டாகி மக்கள் தமது இயல்பு வாழ்க்கையின் பக்கம் திரும்ப வேண்டும் என்பதற்காக ஐவேளைத் தொழுகைகளில் குனூத்துன்னாஸிலாவை சுருக்கமாகவும் உறுதியான நம்பிக்கையுடனும் ஒரு மாதகாலத்திற்கு ஓதிவருமாறு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா குறிப்பு ஒன்றை வெளியிட்டு சகல முஸ்லிம்களையும் வேண்டிக் கொண்டுள்ளது.

நீதிமன்றை அவமதிக்கும்...

தொடர்பாக அண்மைக்காலத்தில் மோசமாக விமர்சனத்திற்குள்ளாகிய வழக்குகள் தொடர்பாகக் கவனத்தில் கொள்ளும்போது அது தொடர்பான சட்டத்தை மீண்டும் கவனத்திலெடுத்தல் உகந்ததென கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, பொருத்தமான சட்டத்தை அறிமுகப்படுத்தும் நோக்கில் அது பற்றிய விடயங்களை ஆராய்ந்து இலங்கை நீதிச் சேவைகள் ஆணைக்குழுவால் அடிப்படைச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படைச் சட்டமூலத்திற்கமைய சட்டமொன்றை வகுப்பதற்கான சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தவாரம் பாரிய...

இவர்களின் அரசு நீண்ட காலம் ஆட்சியில் நீடிக்காது என தெரிவித்துள்ள திஸ்ஸ அத்தநாயக்க, அரசாங்கத்தை கவிழ்க்க இந்த வாரத்திலிருந்து வீதி போராட்டங்களை தொடங்குவோம். தற்போதைய ஆட்சிக்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சியின் போராட்டத்திற்கும் அழைப்பு விடுக்கிறோம் என கூறியுள்ளார். வாழ்க்கைச் செலவு 150 வீதத்தால் அதிகரித்துள்ளபோதும் நிலைமையை கட்டுப்படுத்த அரசாங்கத்தால் முடியவில்லை. இந்த வருடத்திற்கான ஐந்தாவது எரிபொருள் விலை உயர்வு மூலம் மக்கள் இன்னும் கடினமான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் உள்ள 1000க்கும் மேற்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களை விற்பனை செய்யவும், தனியார் நிறுவனங்களுக்கு எரிபொருளை இறக்குமதி செய்து விநியோகிக்கவும் அனுமதியளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. ஆகவே இந்த ஆட்சியாளர்களை மக்கள் விரைவாக வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சுகாதார ஊழியர்கள்...

தெரிவித்துள்ளார். பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் தாதியர்கள் உட்பட 8 இடைநிலை சுகாதார தொழிசங்கத்தினர் இன்று மற்றும் நாளை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக இடைநிலை சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார். எரிபொருள் நெருக்கடி காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மட்டுப்படுத்தப்பட்டுள்ள...

முதல் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி வரை நீதிமன்ற பணிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. தடை உத்தரவு கோரி, அவசர வழக்குகள் தொடர்பாக தாக்கல் செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் முன்மொழிவுகளை குறித்த நாளில் காலை 10 மணிக்குள் காப்பகத்தில் ஒப்படைக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், அதே தினத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனவும் அன்றைய தினம் காலை 10.30க்கு முன்னதாக அறிவித்தல் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டொலர் பெறுமதியில்...

கொள்முதல் பெறுமதி 356 ரூபா 06 சதமாக பதிவாகியுள்ளது. இலங்கை மத்திய வங்கியின் தகவலின் படி நேற்று யூரோ ஒன்றின் விற்பனை பெறுமதி 389 ரூபா 87 சதமாக பதிவாகியுள்ளதுடன் அதன் கொள்முதல் பெறுமதி 374 ரூபா 97 சதமாக பதிவாகியுள்ளது. அதேவேளை நாணய மாற்று விகிதங்களின் படி, பிரித்தானிய பவுண்ட் ஒன்றின் விற்பனை பெறுமதி 452 ரூபா 19 சதமாக பதிவாகியுள்ளதுடன், கொள்முதல் பெறுமதி 435 ரூபா 04 சதமாக பதிவாகியுள்ளது.

பொலிஸ் வாகனத்தை...

நிலைய ஊழியர்களால் தெரிவிக்கப்பட்டது. எனினும் இரவு 11.30 மணியளவில் அந்த எரிபொருள் நிலையத்திற்கு சென்ற பூவரசங்குளம் பொலிஸார் அவர்களின் உத்தியோகபூர்வ வாகனத்தில் கொள்கலன்களை ஏற்றிச் சென்று எரிபொருள் நிரப்பியுள்ளனர். அதனை அவதானித்த அங்கிருந்த இளைஞர்கள் அவர்களின் வாகனத்தையும் பொலிஸாரையும் முற்றுகையிட்டனர். இதன் போது அவ்விடத்தில் இருந்து சில பொலிஸார் அங்கிருந்து சென்றாலும் பொலிஸ் வாகனத்தை எடுத்துச் செல்ல இளைஞர்கள் அனுமதிக்கவில்லை. இதனையடுத்து வாகனத்தின் பொலிஸ் சாரதி மாத்திரம் எரிபொருள் நிலையத்தில் காலை வரை நின்றிருந்தார். நேற்று காலை அங்கு வந்த பூவரசங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தவறுக்கு மன்னிப்பு கோரியதை அடுத்து பொலிஸாரின் வாகனத்தை எடுத்துச் செல்ல இளைஞர்கள் இடமளித்தனர்.

கட்டார் எரிசக்தி அமைச்சருடன்...

நிறைவேற்று அதிகாரியும் கட்டார் எரிசக்தித் துறை அமைச்சருமான Saad Sherida AlKaabi ஐ சந்தித்து பேச்சு நடத்தினார். கட்டார் எரிசக்தி துறையின் உதவியோடு எரிசக்தி நெருக்கடியை சமாளிக்க இலங்கைக்கு பெற்றோலிய பொருட்களை பெற்றுக்கொள்வது தொடர்பில் அவர் பேச்சு நடத்தினார். அரசுடைமையான கட்டார் எனர்ஜி மற்றும் கட்டார் அபிவிருத்தி நிதியத்தின் உதவியுடன் இலங்கை எரிசக்தி நெருக்கடியை சமாளிக்க இலங்கைக்கு பெற்றோலிய உற்பத்திகள் உள்ளிட்ட பொருட்களை பெற்றுக் கொள்வது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர மற்றும் சுற்றாடல் அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் ஆகியோர் கட்டார் சென்றுள்ளனர்.

கண்ணிவெடி அகற்றும் பணிக்கு...

ஜப்பானிய அரசாங்கம் தனது Grant Assistance for Grassroots Human Security Projects (GGP) திட்டத்தினூடாக 681,812 அமெரிக்க டொலர்கள் (சுமார் 244 மில்லியன் ரூபாய்) நன்கொடையை DASH அமைப்புக்கு வழங்கியுள்ளது.

இந்த நன்கொடை வழங்கலுக்கான உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று (28) காலை கிளிநொச்சி மாவட்டத்தின் முகமாலை பகுதியில் அமைந்துள்ள DASH செயற்பாட்டு பகுதியில் இடம் பெற்றது. இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி ஹிதேகி மற்றும் DASH இன் நிகழ்ச்சி முகாமையாளர் ஆனந்த சந்திரசிறி ஆகியோர் கலந்துகொண்டு கைச்சாத்திட்டனர்.

2010 ஆம் ஆண்டு முதல் இது வரையில் DASH இனால் 15 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டிருந்தது. இதில் ஜப்பானிய அரசின் GGP உதவித் திட்டத்தினூடாக 6.5 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் அகற்றப்பட்டு விடுவிக்கப்பட்டது.

"DASH க்கு ஜப்பான் வழங்கும் இந்த உதவியானது, இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியான சூழலில் ஜப்பான் அரசின் இவ்வுதவியானது 135 கண்ணி வெடி அகற்றும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாத்துள்ளது அதற்கான ஜப்பான் அரசுக்கும் அந்நாட்டு மக்களுக்கும் நன்றி கூறுவதாக DASH இன் நிகழ்ச்சி திட்ட முகாமையாளர் ஆனந்த சந்திரசிறி தெரிவித்தார்.

இவ்வருடத்துடன், ஜப்பானுக்கும் இலங்கைக்குமிடையே இராஜதந்திர உறவுகள் ஆரம்பமாகி 70 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதியில் அபிவிருத்தி தொடர்பில் இலங்கைக்கான ஜப்பானிய உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவித் திட்டத்தில் முக்கிய அங்கம் பெறுகின்றது.

இலங்கை அரசாங்கத்தின் "கண்ணிவெடி பாதிப்பற்ற இலங்கை" என்பதை எய்துவதற்கு ஜப்பானிய அரசாங்கம் தொடர்ந்தும் பங்களிப்பு வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

கள்ளச்சந்தை, மாபியாக்களின்...

என பல்வேறு தரப்பினரும் குற்றஞ்சாட்டுகின்றனர். இவ்வாறான நிலையிலேயே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபரை சந்தித்து இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடினார்கள்.

இதன்போது எரிபொருள் நிலையங்களில் நிலவும் பிரச்சனைகளை தீர்த்து, மக்கள் எரிபொருளை பெறுவதை இலகுபடுத்துவதற்காக தங்களால் இயன்றதை செய்வதாக அரச அதிபர் உறுதியளித்ததாக இந்தச் சந்திப்பின் பின் கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

எரிபொருள் இறக்குமதி செய்து விற்க...

"இத்தகைய நிறுவனங்களுக்கு கட்டண அடிப்படையில் எண்ணெய் களஞ்சியப்படுத்தல், விநியோகம் முதலான சேவைகளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வழங்கும்.

இலங்கை பெற்றோலிக் கூட்டுத்தாபனம் வசமுள்ள 1190 எரிபொருள் விற்பனை நிலையங்களில் தெரிவுசெய்யப்பட்ட நிலையங்களும், புதிய நிலையங்களும், லங்கா ஐ.ஓசி. நிறுவனம் மற்றும் புதிய நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.

எண்ணெய் சுத்திகரிப்பு நடவடிக்கையை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேற்கொள்ளும்" எனவும் அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

ஜூலை 10 க்குப் பின் நாடு...

இதை ஒரு பொது முடக்க சூழ்நிலையாகக் கருத வேண்டாம், எரிபொருள் நெருக்கடியை கருத்திற் கொண்டு இது ஜூலை 10 வரை வீட்டிலிருந்து வேலை செய்யும் செயல்முறையாகும், அதன் பிறகு நாடு இயல்பு நிலைக்குத் திரும்பும் என்று நம்புகிறேன்," என்று அவர் கூறியுள்ளார். கடைகள், மருந்தகங்கள் பல்பொருள் அங்காடிகள் போன்றவை. சாதாரண நாட்கள் போல் செயல்பட வேண்டும் என்றார்.

ஒருநாள் சேவையை ஆரம்பிக்க...

இதன்முதல் கட்டமாக, யாழ்ப்பாணத்தில் உள்ள குடிவரவு, குடியகல்வு அலுவலகத்தில் எனது பிரத்தியேக பணத்தை முதலீடு செய்து ஒருநாள் சேவை ஆரம்பிக்கப்படும் என்றார். தற்போது கடவுச் சீட்டைப் பெறுவதற்கு நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமை மாற்றியமைக்கப்படும். இதனைத் தவிர மேலும் ஐந்து இடங்களில் பிராந்திய அலுவலகங்களையும், ஒருநாள் சேவையையும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனவும் அமைச்சர் தம்மிக்க பெரேரா குறிப்பிட்டார்.

எட்டு இலட்சம் சிறார்களுக்கு...

"இலங்கைக்கான மேலதிக உதவியாக 20 மில்லியன் டொலர்களை வழங்குவதாக ஜனாதிபதி பைடன் மேற்கொண்ட இந்த அறிவிப்பு, உணவுப் பாதுகாப்பு, பொதுச் சுகாதாரம் மற்றும் அனைத்து இலங்கை மக்களதும் பொருளாதார நல்வாழ்வு என்பன தொடர்பாக அமெரிக்கா கொண்டுள்ள தொடர்ச்சியான உறுதிப்பாட்டை நிரூபிக்கிறது" என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங் கூறினார்.

"பொருளாதார ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்கு இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் உதவிசெய்வதுடன் இந்த உதவி, அது மிகவும் தேவைப்படும் சமூகங்கள் – மற்றும் சிறார்களை சென்றடைவதை அமெரிக்கா உறுதி செய்யும் " என அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று அறிவிக்கப்பட்ட 20 மில்லியன் டொலர் மனிதாபிமான உதவி, பொருளாதார மற்றும் மனிதாபிமான உதவிகளாக அண்மையில் அமெரிக்கா உறுதியளித்த கிட்டத்தட்ட 12 மில்லியன் டொலர்களுக்கு மேலதிகமாக வழங்கப்படுகிறது. இவ்வறிப்புடன் 2022 ஜூன் 16ஆம் தேதி முதல் இலங்கை மக்களுக்கு அமெரிக்கா வழங்கும் உதவிகளின் மொத்தப் பெறுமதி 32 மில்லியன் டொலர்களாக அதிகரிக்கிறது.

இந்நிதியளிப்பு சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் (USAID) ஊடாக வழங்கப்படும் மற்றும் இது உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுத் தாரதரங்களைக் கடைப்பிடிக்கும் பங்காளர்களுக்கு வழங்கப்படும்.

நிதியளிப்பு கணக்கீடு செய்யப்படுவதையும், உணவுப் பாதுகாப்பின்மையால் மிகவும் பாதிக்கப்படக் கூடியவர்களென அடையாளம் காணப்பட்டவர்களை உதவி சென்றடைவதையும் இது உறுதி செய்கிறது.

வைத்தியசாலையில் வாகன தரிப்பிடம் இன்மையால் மக்கள் அவதி

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

காவத்தை அரச வைத்தியசாலையில் வாகனத் தரிப்பிடம் இன்மையால் இங்கு வரும் நோயாளர்களை அழைத்து வரும் வாகன சாரதிகள் பெரிதும் சிரமப்படுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இரத்தினபுரி, எம்பிலிப்பிடி பிரதான வீதியை அண்மித்து காணப்படும் வைத்தியசாலை வளவில் இடநெருக்கடி காரணமாக வாகனதரிப்பிடம் இன்மையால் நோயாளர்களை அழைத்து வரும் வாகனங்களை நிறுத்தவும் பொலிஸார் அனுமதி வழங்குவதில்லை. இந்நிலைமையால் இவ்வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்காக நோயாளியை அழைத்து வரும் வாகன சாரதி ஒருவர் நோயாளரை வைத்தியசாலை விடுதி அருகில் இறக்கிவிட்டு வாகனத்தை நகரின் எங்காவது ஒரு இடத்தில் நிறுத்திவிட்டுத்தான் மீண்டும் நோயாளரின் விடயங்களை கவனிக்கச் செல்ல வேண்டும். எனவே இவ்விடயத்தில் பொறுப்பு வாய்ந்தவர்கள் கவனம் எடுத்து இவ்வைத்தியசாலைக்கு அவசியமான வாகனத் தரிப்பிடம் ஒன்றை மிக அண்மித்த இடத்தில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சீத்தாவக்க பிரதேச சபை
ஹங்வெல்ல
WP-PE-6879 கெப் வாகனம் மற்றும் WP-ZA-9257 கம்பெக்டர் என்பவற்றின் திருத்தவேலைகளுக்காக விலைமனுகோரல்

1. சீத்தாவக்க பிரதேச சபைக்காக பெறுகைக் குழுவின் தலைவரினால் WP-PE-6879 கெப் வாகனம் மற்றும் WP-ZA-9257 கம்பெக்டர் என்பவற்றில் திருத்தவேலைகளுக்காக பதிவு செய்யப்பட்ட தகுதிகளைக் கொண்டுள்ள வாகனங்கத் திருத்தவேலைகளைச் செய்யும் நிறுவனங்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
2. தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரலின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும்.
3. இதன் பொருட்டு கேள்விகளைச் சமர்ப்பிக்க உத்தேசிக்கும் கேள்விதாரர்கள் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் வருகை தந்து சீத்தாவக்க பிரதேச சபையின் பாதுக்க நூலகத்திற்கு அருகில் வாகனங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் 070-3200708 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. இதன் பொருட்டு தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் சீத்தாவக்க பிரதேச சபை அலுவலகத்திற்கு வருகை தந்து ஒரு வாகனத்திற்கு மீளளிக்கப்படாத 100.00 ரூபா ரொக்கப் பணத்தை (விண்ணப்பக் கட்டணம்) செலுத்தி முழுமையான ஒரு கேள்விப் படிவத் தொகுதியொன்றை சீத்தாவக்க பிரதேச சபை எனும் முகவரிக்கு வியாபார கடிதத் தலைப்பில் எழுதப்பட்ட வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2022-07-21ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் பெற்றுக்கொள்ளலாம்.
5. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு மூன்று கடித உறைகளினதும் இடதுபக்க மேல் மூலையில் ''WP-PE-6879 கெப் வாகனம் மற்றும் WP-ZA-9257 கம்பெக்டர் என்பவற்றின் திருத்தவேலைகள்'' எனக் குறிப்பிட்டு முத்திரைக்குறி பொறித்து 2022-07-22ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிரதேச சபை, ஹங்வெல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது சீத்தாவக்க பிரதேச சபையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.
6. கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து சீத்தாவக்க பிரதேச சபை, தலைமை அலுவலகத்தின் கூட்ட மண்டபத்தில் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.
7. முழுமையற்ற மற்றும் தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும் என்பதுடன் கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரத்தை சீத்தாவக்க பிரதேச சபையின் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

ஜீ. ஜயந்த ரோஹன,
தலைவர்,
சீத்தாவக்க பிரதேச சபை, ஹங்வெல்ல.
2022-06-27

பெறுகை அறிவித்தல்
ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைக்கு துண்டாக்கப்பட்ட மீன் வழங்குதல்
Q 257/22

- வதிவிட நோயாளர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்களின் நுகர்வுக்காக 2022/2023ஆம் வருடத்திற்கு நுகேகொடை, தலபத்பிட்டியவில் அமைந்துள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைக்கு தொடர்ச்சியாக துண்டாக்கப்பட்ட மீன்கள் வழங்குவதை உறுதி செய்ய முடியுமான மற்றும் அரசாங்க வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு துண்டாக்கப்பட்ட மீன்களை வழங்குவதில் குறைந்தபட்சம் மூன்று வருட கால திருப்திகரமான அனுபவத்தைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகள், வர்த்தக நிறுவனங்கள், உற்பத்தியாளர்களிடமிருந்து (ஒப்பந்தக்காரர்களிடமிருந்து) பெறுகைக்குழுத் தலைவரினால் 2022-07-21ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தொடர்பாக விண்ணப்பம் கோரப்படுகின்றது. அதன் பிரகாரம், குறித்த வழங்குநர் துண்டாக்கப்பட்ட மீன்களை ஒரு வருட காலத்திற்கு தொடர்ச்சியாக வழங்கும் இயலுமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- விலைமனுக்கோரல், தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் (NCB) நடைமுறைக்கமைவாக மேற்கொள்ளப்படும். இது தொடர்பாக ஆர்வங்காட்டும் வழங்குநர்கள், ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் கணக்காளருக்கு மீளளிக்கப்படாத 3,500.00 ரூபா விண்ணப்பக் கட்டணத்தை செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டு மற்றும் பணிப்பாளருக்கு நிறுவன கடிதத் தலைப்பிலான எழுத்துமூல வேண்டுதலொன்றை வழங்கல் பிரிவிற்கு சமர்ப்பித்ததன் பின்னர், 2022.06.22ஆம் திகதி முதல் 2022.07.20ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 வரையான காலத்தினுள் விலைமனுப் பத்திரங்களை வழங்கல் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
- 2022/2023ஆம் வருடத்தில் துண்டாக்கப்பட்ட மீன்களின் அண்ணளவான தேவைப்பாட்டுத் தொகை மற்றும் தகவல்கள் விண்ணப்பத்துடன் வழங்கப்படும்.
- சமர்ப்பிக்கப்படும் விலைமனுவின் பெறுமதி 05 மில்லியன் ரூபா அல்லது அதற்கு மேற்பட்டிருந்தால் பொது ஒப்பந்தச் சட்டத்தின் 08ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் சமாகம் மெதுரயில் பெற்றுக்கொண்ட பொது ஒப்பந்தச் சான்றிதழை (PCA03 படிவம்) இயைபுடைய விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
- உரிய முறையில் கையொப்பமிட்டு உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரை பொறிக்கப்பட்ட விண்ணப்பங்கள், தபாலுறையொன்றினுள் உள்ளிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில், "2022/2023ஆம் வருடத்தில் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைக்கு துண்டாக்கப்பட்ட மீன்களை வழங்கும் ஒப்பந்தம்" எனக் குறிப்பிட்டு 2022.07.21ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக இங்கு கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படவோ அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப்பெட்டியில் உள்ளிடலாம். விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதி நேரம் முடிவடைந்ததன் பின்னர் உடனடியாக விண்ணப்பங்கள் திறக்கப்படும் விண்ணப்பதாரர்க்கு அல்லது அவரின் அதிகாரமுள்ள பிரதிநிதியொருவருக்கு விண்ணப்பங்கள் திறக்கப்படும் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம். தாமதமாகிக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அவை திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.
- உத்தேச விலைமனுதாரர்கள் விலைமனுப் பத்திரங்களை எவ்வித கட்டணமுமின்றி வழங்கல் பிரிவில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
- மேலதிக விபரங்களை, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை வழங்கல் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 011-2778610 நீடிப்பு 3142 அல்லது 011-2778624

தலைவர்,
ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,
தலபத்பிட்டிய,
நுகேகொட.

கேள்விக்கான அழைப்பு
மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

01. மத்திய மாகாண கல்வித்திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக்குழுத் தலைவரால் Genaral Education Modanigtion Project (GEMP) மானியத்தின் கீழ் கீழ்க்காணும் கைத்தொழில்களை நிறைவேற்றுவதற்காக குறித்த தகைமைகள் உடைய மற்றும் தகுதிகள் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களிடமிருந்து இத்தால் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுவதுடன் மேற்படி கைத்தொழில்களும் அதனோடு சம்பந்தப்பட்ட பொறியியல் அளவுப்பத்திர தொகையும் ஒப்பந்த காலமும் கீழ்க்காணும் பட்டியலில் உட்படுத்தப்பட்டுள்ளன.
02. தேசிய போட்டி கேள்வி கோரல் முறையில் விலைமனுக்கள் கோரப்படுவதுடன் விண்ணப்பிக்கும் கேள்விதாரர், பட்டியலில் குறிப்பிடப்படும் தரத்தில் CIDA பதிவை நாளது வரைக்கு உட்படுத்தியிருப்பதுடன் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருத்தல் வேண்டும்.
03. இது பற்றிய மேலதிக விபரங்களை மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதம பொறியியலாளர் (தொ.பே.இல- 081-2225494) இடம் பெற்றுக்கொள்ள முடிவதுடன் அவ்அலுவலகத்தில் குறித்த ஆவணங்களை அலுவலக நாட்களில் மு.ப.9.00 பி.ப.4.00 வரை பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. கேள்வி ஆவணக் கட்டணம் ரூ.5000.00 தொகையை மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதம கணக்காளரிடம் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டு மற்றும் கீழ்க்காணும் முகவரிக்கு எழுத்து மூல விண்ணப்பமொன்றை பிரதம பொறியியலாளரிடம் சமர்ப்பித்து, ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட கேள்விப் படிவங்கள் மற்றும் ஆவணங்களை 2022.07.06 முதல் 2022.07.25 வரை மு.ப.9.00 முதல் பி.ப.3.00 இற்கு இடைப்பட்ட காலத்திற்குள் பெற்றுக்கொள்ளலாம். திங்கள், புதன், வியாழன் போன்ற நாட்களில் மட்டும் அலுவலகம் திறந்திருக்கும் 2022.07.18 மு.ப.10.00 இற்கு முன்பு பெறுகைக்கூட்டம் இத்திணைக்களத்தின் பிரதம பொறியியலாளர் பணிமனையில் இடம்பெறுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் சமுகமளித்தல் வேண்டும்.
05. பொறியிடப்பட்ட கேள்விகள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியுடன், 2022.07.27 மு.ப.10.00 இற்கு முன்பு இத்திணைக்களத்தின் முதலாம் மாடியில் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது பதிவுத்தபாலில் தலைவர், பெறுகைக்குழு, மத்திய மாகாண கல்வித் திணைக்களம், கண்டி என்ற முகவரிக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும் அத்துடன் தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும். இவ் வேளையில் கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம்.
06. கேள்விப் பிணை செல்லுபடியாகும் காலம் 91 நாட்களாகும்
07. சகல கேள்விகளும் ஒவ்வொரு கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்டவாறு கீழே பட்டியலில் குறிப்பிடப்படும் பெறுமதிக்கு 2022.10.31ஆம் திகதி வரை செல்லுபடியாகுமாறு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட கேள்விப் பிணையொன்றை அல்லது மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதம கண்காளரிடம் காசாக செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை சகல கேள்வியுடனும் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப்பிணை முறியை மாகாண கல்விப்பணிப்பாளர், மத்திய மாகாண கல்வித்திணைக்களம், கண்டி பெயரில் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
08. பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

தலைவர்
பெறுகைக்குழு,
மத்திய மாகாண கல்வித் திணைக்களம், கண்டி

2022.06.27.

	கைத்தொழில்	பொறியியல் அளவுப் பத்திர அண்ண ளவான பெறுமதி ரூ.மில்லியன்	தேவைப் படும் CIDA பதிவு	கேள்விப் பிணை பெறுமதி பிணைமுறி ஆயின் (ரூ)	கேள்விப் பெறுமதி காசாக எனில் (ரூ)	ஒப்பந்த காலம் (வாரங்கள்)
Under Genaral Education Modanization Project (GEMP) Funds						
01	குருதெனிய பயிற்சி நிலையம் 70X25 மூன்று மாடி கட்டிடத்தின் தரைமாடி மற்றும் ஊழியர் குழாமிற்கான 02 மலசலகூடங்கள் நிர்மாணம் - குருதெனிய	16.55	C6 அல்லது C5	170,000.00	85,000.00	150
02	மப/வலல ஏ ரத்னாயக்க கல்லூரி 30X20 இருமாடி பற்சிகிச்சையகம் நிர்மாணிப்பு வத்தேகம	12.26	C6 அல்லது C5	125,000.00	62,500.00	150
03	மப/அம்பதென்ன ஆ.கல்லூரி புதிய விசேட கல்விப் பிரிவு நிர்மாணம்	4.29	C8 அல்லது C7	40,000.00	22,000.00	120
04	மஹ/ரம்புக்பிட்டிய மகா வித்தியாலயம் கம்பளை - கணிதப்பிரிவு மேம்படுத்தல் - கம்பளை	2.85	C8 அல்லது C7	30,000.00	15,000.00	90
05	மப/சாந்தமேரி ம. கல்லூரி புதிய விசேட கல்விப் பிரிவு நிர்மாணம் மஸ்கெலிய	2.53	C8 அல்லது C7	30,000.00	15,000.00	90
06	மப/சரத் ஏக்கநாயக்க ஆ.க.புதிய விசேட கல்விப் பிரிவு நிர்மாணம் அலவத்துகொட	2.48	C8 அல்லது C7	30,000.00	15,000.00	90
07	மஹ/தெனு கொஸ்ஹின்ன க.கல்லூரி கெலிஓய - புதிய விசேட கல்விப்பிரிவு நிர்மாணம் - கெலிஓய	2.47	C8 அல்லது C7	30,000.00	15,000.00	90
08	மப/பெரமான வித்தியாலயம் புதிய விசேட கல்விப்பிரிவு நிர்மாணம் விஸேபஹுகந்த - கொத்மலை	2.46	C8 அல்லது C7	30,000.00	15,000.00	90
09	மப/தக்ஷிலா க.வி.கம்பளை மலசலகூட அமைப்பு மேம்படுத்துதல் - கம்பளை	2.42	C8 அல்லது C7	30,000.00	15,000.00	90
10	மஹ/தெனு/ ஜனாதிபதி மாதிரிப் பாடசாலை பேராதனை ஏதண்டுவாவ புதிய விசேட கல்விப் பிரிவு நிர்மாணம்	2.42	C8 அல்லது C7	30,000.00	15,000.00	90
11	மப/திஸ்பனேகந்த ஆரம்ப பாடசாலை புதிய விசேட கல்விப் பிரிவு நிர்மாணம் கொத்மலை	2.39	C8 அல்லது C7	30,000.00	15,000.00	90
12	மப/சௌமியமூர்த்தி தொண்டமான் தமிழ் கல்லூரி 60X20 கட்டிடம் பழுது பார்த்தல் -நுவரஎலிய	2.30	C8 அல்லது C7	30,000.00	15,000.00	90
13	நு/தெனிகே தேசிய பாடசாலை உணவகம் நிர்மாணம் - ஹங்குராகெத்த	2.24	C8 அல்லது C7	30,000.00	15,000.00	90
14	மப/நோர்வூட் தமிழ் வித்தியாலயம் புதிய விசேட கல்விப் பிரிவு நிர்மாணம் - நோர்வூட்	2.12	C8 அல்லது C7	30,000.00	15,000.00	90
15	மப/லுணுவில சுமனசார ஆ.கல்லூரி 04 மலசலகூடங்களை நிர்மாணித்தல் - கட்டுகஸ்தோட்டை	1.97	C8 அல்லது C7	30,000.00	15,000.00	90
16	மப/ஹரு லூல்கந்துர தமிழ் கல்லூரி 04 மலசலகூடங்கள் நிர்மாணித்தல் 1 - ஹங்குராங்கெத்த	1.87	C8 அல்லது C7	30,000.00	15,000.00	90
வரி அமைச்சு மானியத்தின் கீழ் (Under Line Ministry Funds)						
01	மப/கம்பளை அரச ஆசியரியர் கல்லூரி 50X36 கட்டிடத்தின் கூரையை பழுது பார்த்தல் - கம்பளை	2.36	C8 அல்லது C7	30,000.00	15,000.00	90

2022-06-27

தலைவர், பெறுகைக்குழு,
மத்திய மாகாண கல்வித் திணைக்களம், கண்டி.

Repeat Your ad For Better Offers

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
விவசாய துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம் – கமத்தொழில் அமைச்சு
IDA Credit No.: 5873 LK

பெறுகை அறிவித்தல்

வட மற்றும் கிழக்கு மாகாணங்களுக்காக தெளிப்பான் (sprinkler) நீர்ப்பாசன முறைமைகளை வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல் மற்றும் கிப்சம் உரத்தை வட மாகாணத்திற்காக வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட ஆகுசெலவிற்காக 58.63 மில்லியனுக்கு நிகரான தொகையை பல்வேறு நாணயங்களில் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து கடனொன்றை இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பாகமொன்றை **வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்காக தெளிப்பான் நீர்ப்பாசன முறைமைகளை வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல் மற்றும் கிப்சம் உரத்தை வட மாகாணத்திற்காக வழங்கல் மற்றும் ஒப்படைத்தலுக்கான** ஒப்பந்தத்தின் கீழுள்ள தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.
2. வட மற்றும் கிழக்கு மாகாணங்களுக்காக தெளிப்பான் நீர்ப்பாசன முறைமைகளை வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்பட வைத்தல் மற்றும் கிப்சம் உரத்தை வட மாகாணத்திற்காக வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் ஆகியவற்றில் கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் தகுதியும் தமைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

விளக்கம்	ஒப்பந்த இல.	விலைமனுப் பிணையின் பெறுமதி (ரூபாவில்)	மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபாவில்)
வட மாகாணத்தில் ஜம்போ வேர்க்கடலை செயற்றிட்டத்திற்காக 300 எண்ணிக்கையான தெளிப்பான் நீர்ப்பாசன முறைமைகள்	LK-MOA-PMU-273875-GO-RFB	720,000.00	7,500.00
அம்பாறை மாவட்டத்தில் கசாவா (cassava) ஜம்போ வேர்க்கடலை செயற்றிட்டத்திற்காக 100 எண்ணிக்கையான தெளிப்பான் நீர்ப்பாசன முறைமைகள்	LK-MOA-PMU-273672-GO-RFB	145,000.00	5,000.00
வட மாகாணத்தில் ஜம்போ வேர்க்கடலை செயற்றிட்டத்திற்காக 40,000 கி.கி. கிப்சம் உரம்.	LK-MOA-PMU-277209-GO-RFB	170,000.00	5,000.00

3. உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் **கமத்தொழில் அமைச்சு, விவசாயதுறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, பெறுகை திணைக்களத்திலிருந்து 2022.06.29 ஆம் திகதியிலிருந்து 2022.07.19 ஆம் திகதி வரையுமான காலப்பகுதியில் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் 0777419521 என்ற இலக்கமுடைய தொலைபேசியூடாக மேலதிக தகவலை பெற்றுக் கொள்ளலாம்.**
5. மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திய பின்னர், கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்தில் செயற்றிட்ட நிதி முகாமையாளரிடம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
6. **2022.07.19 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு** அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கோரல் அனுமதிக்கப்பட மாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. **2022.07.19 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு** கீழேயுள்ள முகவரியில் நேரடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. பூர்த்தி செய்யப்பட்டுள்ள விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென அனுப்பப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக முறையே 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என அடக்கப்பட்டு 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர் அவையிரண்டும் தனியான தபாலுறையொன்றில் அடக்கப்பட்டு, முத்திரையிடப்பட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Supply, Delivery, Installation & Commissioning of Sprinkler Irrigation Systems for Northern and Eastern Provinces and Supply & Delivery of Gypsum Fertilizer for Northern Province"** என குறிக்கப்படல் வேண்டும்.
8. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு:

தலைவர்,
செயற்றிட்ட பெறுகைக் குழு,
விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,
இல.: 123/2, பன்னிப்பிட்டிய பாதை,
பத்தரமுல்ல.

தொலைபேசி: 0112 696086 அல்லது 0777419521
திகதி: 29.06.2022.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஜூன் 29
புதன்கிழமை

மருதமடு பெருவிழாவுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

மருதமடு அன்னையின் ஆடி பெருவிழாவுக்கு இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் இம்முறை கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுதொடர்பாக மடு பரிபாலகர் கேட்போர் கூட்டத்தில் ஆயத்த கலந்துரையாடல் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, மடுபரிபாலகர் அருட்பணி பெப்பி சோசை அடிகளார் மற்றும் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

ஆடிமாத பெருவிழாவுக்கு குறைந்தது இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்விழாவை முன்னிட்டு ஏற்கனவே மடுத்திருத்தலத்தில் காணப்படும் 350 வீடுகளும் பக்தர்களால் பெறப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

தற்பொழுது விழாவுக்கான கொடி

யேற்ற நாளிலிருந்து இதுவரைக்கும் 300ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்காலிக கூடாரங்களை அமைத்துள்ளதுடன் தொடர்ந்து பக்தர்கள் வருகை தந்த வண்ணம் இருக்கின்றனர். வருகை தருபவர்களுக்கு உணவுகள் கிடைக்கக்கூடிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும் மற்றைய வசதிகள் திருப்திகரமாக நடைபெற்று வருவதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

ஆலயப் பகுதிக்குள் உணவு பொருட்கள் அதிக விலைக்கு விற்பனை செய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு மடு பரிபாலகர் இக்கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்.

இதனை தொடர்ந்து பாவனையாளர் அதிகார சபை அதிகாரிகளை கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டது.

மடு ஆலயப்பகுதிக்குள் ஒழுக்க சீர்கேடுகள் நடைபெறாதிக்கும் முகமாக பலத்த பாதுகாப்புக்கள் கண்காணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

நுளம்புத் தொல்லைகளை தடுக்க சுகாதார சேவை திணைக்களத்தால் மருந்து விசிறிகள் தெளிக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதற்கான எரிபொருள் மடு பிரதேச செயலாளர் ஊடாக அரச அதிபரால் வழங்கப்பட்டு வந்தமைக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

மடு ஆலயத்துக்குள் 10 நுழைவாயில்கள் இருக்கின்றபோதும் தற்பொழுதுள்ளபக்தர்களின்வருகையை கவனத்திற்கொண்டு இதுவரை 6 நுழைவாயில்கள் திறந்துவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

போதைப்பொருள் பாவனை தொடர்பில் விழிப்புணர்வு

பருத்தித்துறை விசேட நிருபர்

போதைப்பொருள் பாவனை தொடர்பாக விழிப்புணர்வூட்டும் வகையில் பஸ்களில் ஸ்டிக்கர்களை ஒட்டும் நடவடிக்கைகள் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் பல்வேறுபட்ட தன்னார்வ அமைப்புக்களின் பங்கேற்புடன்

யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் நேற்று காலை 9 மணியளவில் இடம்பெற்ற நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், யாழ்.பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் உஜித் லியனகே உள்ளிட்ட மாவட்ட செயலக அதிகாரிகள் தன்னார்வ அமைப்பினர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

போதைப்பொருள் துஷ்பிரயோகம் மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினத்தை முன்னிட்டு இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

போதைப்பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உளவளதுணை சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட 1927 என்கிற உடனடி இலவச தொலைபேசி சேவை என்பவற்றை அறிமுகப்படுத்தும் பதாகை திறந்து வைக்கப்பட்டதுடன் பஸ்களில் ஸ்டிக்கர்களை காட்சிப்படுத்தும் நிகழ்வும் இடம்பெற்றது.

ஒட்டுசுட்டான் பிரதேச மக்களுக்கு அறிவுறுத்தல்!

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட மக்கள் எரிபொருளை பெறுவது தொடர்பில் பிரதேச செயலாளர் அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளார். எரிபொருள் அட்டை பெற்றுக் கொள்வதற்காக குடும்ப அட்டை, வாகனப் புத்தகம், வருட வாகன வரி அனுமதிப் பத்திரம் (Tax), இவ்வருடத்துக்கான வாகனக் காப்புறுதி அனுமதிப் பத்திரம்(Insurance), தேசிய அடையாள அட்டை போன்றவற்றை கொண்டு செல்ல வேண்டும். மேலும் வாகனம் பாவனையில் இருத்தல், ஒரு வாகனத்திற்கு ஒரு அட்டை, வாகன உரிமையாளர் பெயரில் மட்டும் அட்டை வழங்கப்படும் போன்ற நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

18 வயது பாடசாலை மாணவன் கடத்தல்

பொலிஸார் தீவிர விசாரணை

சாவகச்சேரி விஷேட நிருபர்

நாவற்குழி தச்சன்தோப்பு பகுதியைச் சேர்ந்த 18 வயதான மாணவன் ஒருவர் காணாமல் போயிருப்பதாக அவரது தாயாரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது. நேற்றுமுன்தினம் 27/06 திங்கட்கிழமை பிற்பகல் மாணவன் பத்திரமாக வீடு வந்து சேர்ந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது; கடந்த ஞாயிற்றுக்கிழமை மதியம் மாணவன் வீட்டிலிருந்து நாவற்குழி சந்திப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையத்திற்கு சென்றிருந்த போது மாணவன் காணாமல் போனதாக அவரது தாயார் திங்கட்கிழமை மதியம் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தார். இந்நிலையில் திங்கட்கிழமை பிற்பகல் மாணவன் பத்திரமாக வீடு வந்து சேர்ந்திருந்தார். மாணவனிடம் மேற்கொண்ட விசாரணையில் வான் ஒன்றில் தன்னை இனந்தெரியாத நபர்கள் கடத்திச் சென்று அனுராதபுரம் பகுதியில் வான் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது அதிலிருந்து தப்பித்து பஸ்சில் ஏறி வீடு வந்து சேர்ந்திருப்பதாக தெரிவித்திருந்தார்.

சிறுமி கடத்தல் சம்பவம் இருவர் கைது

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தில் சிறுமி ஒருவர் கடத்தப்பட்டதாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் இரு இளைஞர்களை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் உறவினர்களால் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். யாழ்.நகர பகுதியை சேர்ந்த சிறுமி ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.நகர் பகுதியில் வைத்து கடத்தப்பட்டதாக உறவினர்களால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சிறுமி, கிளிநொச்சி பகுதியில் வைத்து பொலிஸாரினால் மீட்கப்பட்டு, கிளிநொச்சி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அதேவேளை தமது முறைப்பாடு தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் உரிய விசாரணைகளை முன்னெடுக்கவில்லை எனவும், அப்பகுதியில் வசிக்கும் இளைஞர் குழுவொன்றினால் தமக்கு தொடர்ந்து அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவதாக தெரிவித்து வடமாகாண ஆளுநர் அலுவலகத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து துரித விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாண பொலிஸார் சிறுமியின் உறவினர்களின் வாக்குமூலத்தின் அடிப்படையில், சந்தேகத்தின் பேரில் இரு இளைஞர்களை கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கான ஜப்பான் நாட்டுடன் ஒப்பந்தம் கைச்சாத்து

244 மில்லியன் நிதியுதவி

(பரந்தன் குறூப் நிருபர்,கிளிநொச்சி குறூப் நிருபர்)

டாஸ் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணிக்கான அடுத்த ஓராண்டுக்கான ஜப்பான் நாட்டு உதவி ஒப்பந்தம் நேற்று கைச்சாத்திடப்பட்டது.

நேற்று காலை 8.30 மணியளவில் முகமாலை பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் இடம்பெறும் பகுதியில் குறித்த ஒப்பந்தம் கைச்சார்த்திடப்பட்டது.

ஜப்பான் நாட்டின் தூதுவர் மிசுகோஸி கிடேகி இந்நிகழ்வில் கலந்துகொண்டு, நன்கொடையாளர் சார்பில் கைசாத்திட்டார். அவருடன் ஜப்பான் தூதரகத்தின் 2ஆம் நிலை செயலாளர் இகராசி டோருவும் கைச்சாத்திட்டார். டாஸ் நிறுவனத்தின் சார்பாக இயக்குனரும் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளருமான ஆனந்த சந்ரசிறி மற்றும் செயற்திட்ட முகாமையாளர் சுனில் ஆரியசேன ஆகியோர் ஒப்பமிட்டனர்.

இப்பணியினை முன்னெடுக்க 681,812 அமெரிக்க டொலருக்கான மானிய ஒப்பந்தமே இதன்போது நிதியுதவியுடன் 15.82 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் கண்ணிவெடி அகற்றப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளது. இதன்போது 106,304 மனிதருக்கு தீங்கேற்படுத்தும் கண்ணிவெடிகளும், 245 கனரக வாகனங்களுக்கெதிரான கண்ணிவெடிகளும், 26,019 வெடிக்கும் தருவாயில் உள்ள எச்சங்களும், 164,115 சிறிய ஆயுத வெடிமருந்துகளும் கண்டு அழிக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் தெளிவுபடுத்தியுள்ளது.

ஜப்பான் நாட்டின் 13ஆவது வருடமாக டாஸ் நிறுவனத்தின் செயற்பாடுகளை முன்னெடுக்க ஜப்பான் அரசாங்கத்தினால் நிதியுதவி வழங்கப்படுகின்றது. ஜப்பான் நாட்டின் நிதியுதவியினால் மாத்திரம் 6.4 சதுர கிலோமீற்றர் பரப்பு கண்ணிவெடி அகற்றப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மிகுதி பணிக்கான அடுத்த ஆண்டு நிதியுதவிக்கான ஒப்பந்தமே நேற்று இரு தரப்பாலும் கையொப்பமிடப்பட்டது. தொடர்ந்து மனித நேய பணியில் ஈடுபடும் குழுவினருடன் புகைப்படம் எடுக்கப்பட்டதுடன், செயற்பாடுகள் தொடர்பில் தூதுவர் மற்றும் தூதரக அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது. பின்னர் களப்பணிகளை குழுவினர் பார்வையிட்டதுடன், அகற்றப்பட்ட வெடிபொருட்களின் மாதிரிகளையும் அவர்கள் பார்வையிட்டனர்.

கிளிநொச்சி சுகாதார பணிப்பாளர் மீது தாக்குதல்

சந்தேகநபரின் விளக்கமறியல் நீடிப்பு

(பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மீது தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்த சந்தேகநபரை எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றும் சுகாதாரத்துறை உத்தியோகத்தர்களுக்கான எரிபொருட்கள் கடந்த 23 ஆம் திகதி கிளிநொச்சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருந்த போது நபரொருவரால் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சரவண பவன் மீது தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருந்தது. இச்சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நேற்றைய தினம் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அரச கடமைக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் அரச அதிகாரி ஒருவரை தாக்க முற்பட்டமை போன்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி கிராம அலுவலர்கள் கவனயீர்ப்பு போராட்டம்

கரவெட்டி தினகரன் நிருபர்,யாழ்.விசேட நிருபர்

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலக கிராமசேவகர்கள் தமக்கு எரிபொருளை வழங்குமாறு கோரி நேற்று காலை 9:00, மணியிலிருந்து கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை சுகவீன விடுப்பு போராட்டத்தில் ஈடுபட்ட கிராமசேவகர்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். கிராம சேவகர்களால் நடாத்தப்படும் கவனயீர்ப்பு போராட்டத்தில் கிராம சேவகர்கள் அத்தியாவசிய அலுவலர்களா? அல்லது அநாவசிய அலுவலர்களா? எரிபொருள் விநியோகத்தில் கிராம அலுவலர்களை புறக்கணிக்காதீர்கள், கொவிட் காலத்தில் அத்தியாவசிய அலுவலர்கள் பொருளாதார நெருக்கடி காலத்தில் ??? என பதாதைகள் ஏந்திய வண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடமாகாண ஆளுநரின் தலையீட்டினால் இ.போ.சபை பஸ் ஊழியர்களுக்கு எரிபொருள்

கோப்பாய் குறூப் நிருபர்

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் தலையீட்டினால் இலங்கை போக்குவரத்து சபை வடபிராந்திய சாலைகளில் கடமையாற்றும் சாரதி மற்றும் காப்பாளர்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இலங்கை போக்குவரத்து சபையின் வட மாகாணத்திலுள்ள ஏழு சாலைகளில் கடமையாற்றும் சாரதி மற்றும் காப்பாளர்கள் கடமைக்கு செல்வதற்கு எரிபொருள் வழங்கவில்லை என ஊடக சந்திப்பை நடாத்தியிருந்தனர். இதனையடுத்து வடமாகாண ஆளுநர் இவ்விடயம் தொடர்பில் கரிசனை செலுத்தியுள்ளார். இதன் பிரகாரம் ஆளுநர் இலங்கை போக்குவரத்து சபை வடமாகாண பிரதான முகாமையாளரை தொடர்புகொண்டு போக்குவரத்து சேவை அத்தியாவசிய தேவையாக கருதப்படுகின்றமையால் தடையின்றி மேற்கொள்வதற்கு சாரதி, காப்பாளர்கள் கடமைக்கு செல்வதற்கு தேவையான எரிபொருளை வழங்குவதற்கு உரிய தரப்பினருடன் கலந்துரையாடுமாறு தெரிவித்திருந்தார்.

அதற்கமைய மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் வடமாகாண பெற்றோலிய கூட்டுத்தாபன முகாமையாளருக்குமிடையில் நேற்று (28) திங்கட்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. முல்லைத்தீவைச் சேர்ந்த இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு முள்ளியவளை எரிபொருள் நிலையத்தில் எரிபொருள் வழங்கப்படும் அதேவேளை மன்னார் சாலையை சேர்ந்தவர்களுக்கு மன்னாரில் எரிபொருள் வழங்கப்படும். வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு நேற்று (28) செவ்வாய்க்கிழமை எரிபொருள் வழங்குவற்கான ஏற்பாடுகள் வவுனியா மாவட்ட அரச அதிபரினால் மேற்கொள்ளப்பட்டது. அதேபோல் யாழ் மாவட்டத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அமைச்சரவை தீர்மானங்கள்

'இலங்கைக்கான வேலைத்திட்டம்' அமெரிக்காவுடன் ஒப்பந்தம்

வினைத்திறனான ஜனநாயக ஆட்சி, காப்பீட்டு சந்தை அடிப்படையிலான விருத்தி, இடர்கள் மற்றும் அழுத்தங்களுக்கு முகம்கொடுக்கத் தேவையான வளங்களைப் பலப்படுத்தல் போன்ற துறைகளில் அடிப்படைக் கவனத்தைச் செலுத்தி 'ஜனநாயக, சுபீட்சமான மற்றும் இடர்களுக்கு முகம்கொடுக்கக் கூடிய இயலுமை கொண்ட இலங்கைக்கான வேலைத்திட்டம்' எனும் பெயரில் புதிய வேலைத்திட்டமொன்றை 2026 ஆம் ஆண்டு வரைக்கும் நடைமுறைப் படுத்தப்படும் வகையில் 57 மில்லியன் அமெரிக்க டொலர்களை USAID மூலம் பெற்றுக் கொள்வதற்கான புதிய ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய இவ் வழங்கலைப் பெற்றுக்கொள்வதற்காக பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

'ஜனநாயக நல்லாட்சி மற்றும் ஒருமைப்பாட்டுக்கான ஒத்துழைப்புக்களை வலுப்படுத்தும் வேலைத்திட்டம்' மற்றும் 'காப்பீட்டுப் பொருளாதார விருத்தியை ஏற்படுத்தும் வேலைத்திட்டம்' ஆகியவற்றுக்குத் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை மற்றும் அமெரிக்காவுக்கிடையே 2011 ஆம் ஆண்டில் இரண்டு ஒப்பந்தங்கள் கையொப்பமிட்டுள்ளதுடன், அதற்கமைய, இவ்விண்டு வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன.

யாழ்.சர்வதேச விமான நிலையத்தின் நாடுகளுக்கிடையில் சேவைகளை மீண்டும் ஆரம்பித்தல்

யாழ்.சர்வதேச விமான நிலையத்தின் நாடுகளுக்கிடையிலான சேவைகளை ஜூலை மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பித்தல் தொடர்பாக துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகள் அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்டுள்ள படிமுறைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அடிப்படை சர்வதேச ஒழுங்குபடுத்தல் தேவைகளை உறுதிப்படுத்திக் கொண்டு யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தின் நாடுகளுக்கிடையிலான தொழிற்பாடுகள் 2019 நவம்பர் மாதம் 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டாலும், கொவிட் 19 தொற்று நிலைமையால் அதன் நடவடிக்கைகள் 2020 மார்ச் மாதம் 15 ஆம் திகதி வரை தற்காலிகமாகப் பிற்போடப்பட்டது. அவ்விமான நிலையத்திலிருந்து தென்னிந்திய விமான நிலையம் வரைக்கும் வாடகை விமானத் தொழிற்பாடுகள் மற்றும் நேர அட்டவணைக்கமைவான விமானப் பயணங்களை மேற்கொள்வதற்காக சர்வதேச ரீதியாகவும் உள்ளூரிலும் நிறுவப்பட்டுள்ள விமானக் கம்பனிகள் தற்போது வேண்டுகோள்களைச் சமர்ப்பித்துள்ளன.

உணவுப் பயிர் உற்பத்திகள் தேசிய புரட்சி – 2022

தற்போது நாட்டில் உணவுப் பாதுகாப்பு தொடர்பாக மேலெழுந்துள்ள பிரச்சினைகளுக்குத் துரிதமாகத் தீர்வு காண்பதற்காக விவசாய அமைச்சின் தலைமையின் கீழ் அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சு உள்ளிட்ட ஏனைய அமைச்சுக்களையும் இணைத்துக் கொண்டு அனைத்து அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புக்களுடன் நாடளாவிய ரீதியில் முறைசார் மற்றும் துரிதமாக உணவுப் பயிர் உற்பத்திகள் தேசிய வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்குத் அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர், விவசாய அமைச்சர் மற்றும் புத்தசாசன, மதங்கள் மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சர் ஆகியோர் சமர்ப்பித்துள்ள கூட்டான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சிறுவர்கள், இளையவர் தொடர்பான கட்டளை சட்டத்தில் திருத்தம்

சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சமவாயத்தில் 18 வயதுக்குக் குறைவான எந்தவொரு பிள்ளையும் சிறுவர் எனப் பொருள்கோடல் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இச் சமவாயத்துக்கு இணங்கியொழுகி இந்த ஏற்பாடுகளை உட்சேர்த்து சிறுவர்கள் மற்றும் இளையவர் தொடர்பான கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக 2020 செப்டம்பர் மாதம் 16 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இத் தீர்மானத்துக்கமைய சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்துக்கு சட்ட மாஅதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. அதற்கமைய, இச் சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சிறுவர் பாதுகாப்பு, நீதி தொடர்பாக புதிய சட்டம் அறிமுகப்படுத்த திட்டம்

பாதுகாப்பு மற்றும் காப்பீடுகள் தேவையான பிள்ளைகள் தொடர்பாக வழக்கு விசாரணைகளுக்கோ அல்லது சட்டத்தை மீறுகின்ற பிள்ளையொருவருக்கு எதிராக வழக்கு விசாரணைக்காக நீதிமுறை அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் மற்றும் பிள்ளைகள் தொடர்பாக வேறு விதத்தில் நீதிமுறை அதிகாரத்தை செயற்படுத்தும் நீதிமன்றங்களை நிறுவுவதற்கு இயலுமை கிட்டும் வகையில் சிறுவர் (நீதிமுறைப் பாதுகாப்பு) தொடர்பான சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக 2015 பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள அடிப்படை சட்டமூலத்துக்காக இரண்டு விசேட நிபுணத்துவக் குழுக்கள் மூலம் ஆராயந்து மேலும் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தற்போது தயாரிக்கப்பட்டுள்ள அடிப்படை சட்டமூலத்தில் இம் முன்மொழிவுகளையும் உட்சேர்த்து இறுதிச் சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மோசடிகளைத் தடுக்கும் கட்டளை சட்டத்தை திருத்தம் செய்தல்

நொத்தாரிஸ் கட்டளைச் சட்டம் மற்றும் மரணசாதன கட்டளைச் சட்டங்களுக்காக மேற்கொள்வதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள திருத்தங்களுக்கு இணங்கியொழுகும் வகையில் மோசடிகளைத் தடுக்கும் கட்டளைச் சட்டத்துக்கு ஒருசில விளைவாய்ந்த தன்மையுடைய திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய தேவையைக் கருத்தில் கொண்டு, அதற்கான சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக 2021 ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்துக்கு சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. இச் சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அற்றோனித்தத்துவ உரிமப்பத்திர கட்டளை சட்டத்தை திருத்தம் செய்தல்

போலியாகவும் மற்றும் சட்ட விரோதமாகவும் அற்றோனித்தத்துவ உரிமப்பத்திரத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மோசடிச் செயற்பாடுகளைக் குறைப்பதற்காக அற்றோனித்தத்துவ உரிமப்பத்திர கட்டளைச் சட்டத்துக்கான திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்காக 2021 ஜூலை மாதம் 19 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்துக்கு சட்ட மாஅதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. இச் சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்தல் புதிய சட்டம் அறிமுகம்

இலங்கையில் நீதிமன்றத்தை அவமதித்தல் குற்றம், பொருள்கோடல் செய்யப்படாமையால் அவ்வாறான வழக்குகளை விசாரணை செய்வதற்கும் மற்றும் தீர்மானங்களை எடுப்பதற்கும் தெளிவானதும் ஒரே விதமானதுமான நடைமுறையொன்று தற்போது பின்பற்றப்படுவதில்லை.

அதனால் நீதி வழங்கும் செயன்முறையில் தலையிடும் மட்டுப்பாடுகள் மற்றும் கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்தின் கீழ் காணப்படும் மட்டுப்பாடுகள் தொடர்பாகப் புரிந்து கொள்வதில் சிரமங்கள் காணப்படுகின்றன. அதேபோல், நீதிமன்றத்தை அவமதித்தல் தொடர்பாக அண்மைக்காலத்தில் மோசமாக விமர்சனத்துக்குள்ளாகிய வழக்குகள் தொடர்பாகக் கவனத்தில் கொள்ளும் போது அது தொடர்பான சட்டத்தை மீண்டும் கவனத்திலெடுத்தல் உகந்ததென கண்டறியப்பட்டுள்ளது.

அதுபற்றிய விடயங்களை ஆராய்ந்து இலங்கை நீதிச் சேவைகள் ஆணைக்குழுவால் அடிப்படைச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த அடிப்படைச் சட்டமூலத்துக்கமைய சட்டமொன்றை வகுப்பதற்கான சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நொத்தாரிஸ் கட்டளை சட்டத்துக்கான திருத்தங்களை அறிமுகப்படுத்தல்

காணி மோசடிகள் தொடர்பாக சட்ட விரோத செயற்பாடுகளைத் தடுக்கும் நோக்கில் புதிய ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்காக நொத்தாரிஸ் கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக 2021 ஜூலை மாதம் 19 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆவணங்களைப் பதிவு செய்யும் கட்டளை சட்டத் திருத்தம்

காணிகள் தொடர்பான மோசடிகள் மற்றும் முறைகேடுகளைத் தடுப்பதற்காகப் புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக ஆவணங்களைப் பதிவு செய்யும் கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக 2021 ஜூலை மாதம் 19 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இருபத்திரண்டாவது அரசியலமைப்பு திருத்தம்

22 ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பான அடிப்படைச் சட்டமூலத்துக்கு 2022.06.20 நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கொள்கை ரீதியான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் 22 ஆவது அரசியலமைப்பு திருத்தம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இச் சட்டமூலம் அரசியலமைப்புக்கு இணங்கியொழுகவில்லை என்பதை சட்ட மாஅதிபரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, 22 ஆவது திருத்தச் சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜெட் ஏ–1 விமானங்களுக்கான எரிபொருள்; புதிய விநியோகத்தர்களை அடையாளங்காணல்

இலங்கைக்கும் மற்றும் இலங்கைக்கு வெளியேயும் விமான சேவைகளின் தொழிற்பாடுகளுக்காக நாளாந்தம் 1.2 மில்லியன் லீற்றர் எரிபொருள் தேவைப்படுவதுடன், நாட்டில் தற்போதைய நிலைமையின் கீழ் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு விமானக் கம்பனிகளின் தொழிற்பாடுகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்வதற்குத் தேவையான குறைந்தபட்ச எரிபொருள் அளவைக் கூட விநியோகிப்பதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு இயலாது போயுள்ளது.

இந்நிலைமையின் கீழ் விமான சேவை தொழிற்பாடுகளை முடக்கப்படாமல் தொடர்ந்து மேற்கொண்டு செல்வதற்கு இயலுமை கிட்டும் வகையில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள எரிபொருள் களஞ்சியக்காரர்களுக்கு ஜெட் ஏ1 விமானங்களுக்கான எரிபொருளை இறக்குமதி செய்தல், விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தலுக்கு அனுமதி வழங்குவதற்காக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மஹதிவுல்வெவ வைத்திய அதிகாரியை இடமாற்ற கோரி ஆர்ப்பாட்டம்

ரொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் கடமையாற்றி வரும் வைத்திய அதிகாரியை உடனடியாக இடமாற்றுமாறு கோரி பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வார்ப்பாட்டம் நேற்று (28) காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை இடம்பற்றது.

'எமது வைத்தியசாலை எமக்கு வேண்டும்!,'நோயாளிகளை கவனிக்காத வைத்தியர் எமக்கு வேண்டாம்!'நோயாளர்களின் நோய்களை கூறும்போது கிண்டலடிக்கும் வைத்தியர் வேண்டாம்!'

'டொக்டர் சோபா எமக்கு வேண்டாம்!' போன்ற பதாகைகளை ஏந்தியவாறு மக்கள் கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன் தற்போது மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலை பொறுப்பதிகாரியாக கடமையாற்றி வரும் டொக்டர் சோபா கும்புரேகம என்பவர் அநாகரீகமான முறையில் தமது கடமைகளை மேற்கொண்டு வருவதுடன், நோயாளர்கள் வைத்தியசாலைக்கு செல்லும் போது தேவையற்ற வசனங்களை நோயாளர்களை துன்புறுத்தும் விதத்தில் பாவித்து வருவதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது குறிப்பிட்டனர்.

இதேவேளை ஆர்ப்பாட்டக்காரர்கள் வைத்தியசாலைக்கு உள்ளே சென்று கடமை நேர வைத்திய அதிகாரி டொக்டர் டுலான் பெரேராவிடம் மகஜர் ஒன்றினையும் கையளித்தனர்.

எரிபொருள் நிரப்பு நிலைய வரிசையில் நின்றவர்கள் மீது பஸ் மோதி 05 பேர் வைத்தியசாலையில்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு – ஊறணி பகுதியில் இடம் பெற்ற விபத்தில் 5 பேர் வரையில் காயமடைந்துள்ளதுடன், 5 மோட்டார் சைக்கிள்கள் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எரிபொருள் நிரப்பு நிலைய வளாகத்திற்கு முன்னால், (திங்கட்கிழமை) காலை வரிசையில் தரித்திருந்த வாகனங்கள் மீது வீதியில் பயணித்த தனியார் பேருந்தொன்று மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

செங்கலடியிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த தனியார் பேருந்து ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக கொக்குவில் போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த ஐவரும் மட்டு. போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் பேருந்தின் சாரதி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ள நிலையில், அவரை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

திருகோணமலை விநாயகபுரத்தில் நூதனமான பெட்ரோல் திருட்டு

ரொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை விநாயகபுரம் பகுதியில் கும்பல் ஒன்று வீட்டுக்கு வெளியே நிறுத்தி வைத்திருந்த மோட்டார் சைக்கிளில் பெட்ரோலை திருடும் காட்சி ஒன்று அங்கிருந்த சிசிரிவி பாதுகாப்பு கமராவில் இவ்வாறு பதிவாகியிருந்தது.

நான்கு பேரைக் கொண்ட குழு ஒன்றில் மூன்றுபேர் வீதிகளில் காவல் பணிகளில் ஈடுபட ஒரு நபர் மோட்டார் சைக்கிளில் இருந்து பெற்றோலை திருடுகின்ற சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை விநாயகபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவுகின்ற இன்றைய சூழலில் பலர் எரிபொருளை பதுக்கும் நடவடிக்கைகளிலும் அதிகமான விலைக்கு விற்பனை செய்கின்ற நடவடிக்கைகளிலும் தரித்து நிற்கின்ற வாகனங்களில் எரிபொருளை திருடுகின்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றார்கள். குறிப்பாக போதைப் பொருள் பழக்கத்திற்கு அடிமையாகியுள்ள இளைஞர்கள் இதுபோன்ற திருட்டுச் சம்பவத்தில் அதிகம் ஈடுபட்டு வருவதாக தெரிய வருகின்றது.

WINDFORCE

WINDFORCE PLC' நிறுவன பங்குதாரர்களுக்கான அறிவித்தல்

PQ 00234079

12வது ஆண்டு பொதுக் குழுக் கூட்டத்துக்கான அறிவித்தல்

WindForce PLC' நிறுவனத்தின் பன்னிரண்டாவது (12வது) ஆண்டுப் பொதுக் குழுக் கூட்டம் ("ஆபொகூ") இணையவழியாக மெய்நிகர் தளம் ஒன்றில், எதிர்வரும் ஜூலை மாதம் 20ம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத் தருகிறோம். மேற்படி கூட்டமானது, 2022ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28ம் திகதி நடைபெறும் என்று, ஏற்கனவே வெளியிடப்பட்ட கொழும்பு பங்குச் சந்தையின் கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்ததை கவனத்தில் கொள்ளுமாறும் வேண்டுகிறோம். வருடாந்த அறிக்கையின் பிரதிகள் இந்த வருடம் விநியோகிக்கப்படாது என்பதை நினைவு கூருகின்றோம்.

பங்குதாரர்களுக்கு இது பற்றிய துணைச் சுற்றறிக்கை, இணையதளம் வாயிலாக கூட்டத்தில் கலந்துகொள்வதற்கான பதிவுகளை மேற்கொள்வதற்கான வழிகாட்டல்கள், ஆண்டுப் பொதுக் குழுக் கூட்டத்துக்கான அறிவித்தல் மற்றும் ப்ரொக்ஸி படிவத்துடன் கொழும்பு பங்குச் சந்தை மற்றும் WindForce PLC இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

இக்கூட்டத்தில் கலந்துகொள்ள விரும்பும் பங்குதாரர்கள், மேலே குறிப்பிடப்பட்டுள்ள இணையதளத்தில் உள்ள பதிவுப் படிவத்தைப் பூரணமாக நிரப்பி, நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு (334, T.B.Jayah Mawatha, Colombo 10)க்கு அனுப்புமாறும் அல்லது படிவத்தை info@windforce.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ, கூட்டம் நடைபெறத் தீர்மானிக்கப்பட்டிருக்கும் நேரத்துக்கு குறைந்தது 48 மணிநேரத்துக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

Investor Relations Page

CSE Page

WindForce PLC, No. 334, T. B. Jaya Mawatha, Colombo 10, Sri lanka. IT: +94 112 697 151

நகர்வலம்

முஹம்மத் அலி ஜின்னா அனுப்பிய கடிதத்தின் பிரதி, பாக், உயர்ஸ்தானிகரிடம் கையளிப்பு

பேருவளை தினகரன் விஷேட நிருபர்

பாகிஸ்தான் சிந்தனைச்சிற்பி காயிதேமில்லத் முஹம்மத் அலிஜின்னா, சீனன்கோட்டை மக்களுக்கு நன்றி தெரிவித்து அந்தக்காலத்தில் அனுப்பிய கடிதத்தின் பிரதி, இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் உமர் பாரூக்கிடம் அண்மையில் கையளிக்கப்பட்டது. சீனன்கோட்டை பள்ளிச்சங்க இணைச் செயலாளர் எம்.எம்.எம். சிஹாப் ஹாஜியார், சீனன்கோட்டை கல்வி மேம்பாட்டு நிலைய உறுப்பினரும் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை நிர்வாகக்குழு உறுப்பினருமான அஷ்ஷெய்க் இஹ்ஸானுத்தீன் அபுல்ஹஸன் (நளீமி) ஆகியோர், இக்கடிதத்தின் பிரதியை கையளித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர்மாக்காருக்கும் இதன் போது, இக்கடிதத்தின் பிரதி ஒன்று கையளிக்கப்பட்டது. பேருவளை மருதானையில் நடைபெற்ற வைபவமொன்றில், இப்பிரதிகள் இவர்களுக்கு வழங்கப்பட்டன.

பாகிஸ்தானின் சிற்பி காயிதேமில்லத் முஹம்மது அலி ஜின்னாவின் 70ஆவது பிறந்ததினம் 1946ஆம் ஆண்டு மே மாதம் 28ஆம் திகதி கொண்டாடப்பட்டபோது, பேருவளை சீனன்கோட்டை வாழ் மக்கள் சார்பில் பெறுமதிவாய்ந்த 70 இரத்தினக்கற்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இந்த இரத்தினக்கற்களை மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்ட காயிதேமில்லத் முஹம்மத் அலி ஜின்னா, சீனன்கோட்டை வாழ் மக்களுக்கு நன்றி தெரிவித்து அப்போதைய சீனன்கோட்டை கல்வி மேம்பாட்டு நிலைய செயலாளர் மர்ஹூம் எம்.எல்.எம். ஹாஸிமுக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

இந்தக் கடிதத்தின் பிரதிகளே இந்நிகழ்வில் கையளிக்கப்பட்டன.

புதையல் தோண்டிய நால்வர் கைது

அநுராதபுரம் தினகரன் நிருபர்

புதையல் தோண்டிய சம்பவத்துடன் தொடர்புடய சந்தேக நபர்கள் நான்கு பேரை, மதவாச்சி பூனேவ பொலிஸார் கைது செய்துள்ளனர். பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய கடந்த (22) அதிகாலை இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பூனேவ ரயில் நிலைய குறுக்கு வீதியிலுள்ள கைவிடப்பட்ட இடமொன்றில் நடத்திய சுற்றிவளைப்பில் இவர்கள் நால்வரும் கைதாகினர்.

புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் மற்றும் பூஜைப் பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் 28, 33, 34, 45 வயதுடைய பூனேவ, மதவாச்சி மற்றும் மினுவாங்கொட பகுதிகளை வசிப்பிடமாக கொண்டவர்கள் என்பது பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பூனேவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ரஞ்ஜித் பண்டா மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் விமல் உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் மதவாச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் நீங்க நாட்டுக்கும், மக்களுக்கும் விஷேட பிரார்த்தனை

புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க அண்மையில் (26)கொழும்பு தெவட்டகஹ ஜும்மா பள்ளிவாசலுக்கு விஜயம் செய்து மத அனுஷ்டானங்களில் ஈடுபட்டார்.

இந்நிகழ்வில், நாட்டுக்கும், மக்களுக்கும் தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் நீங்கி அனைத்து இன, மத மக்களும் சாந்தி சமாதானத்துடன் வாழவும் விஷேட துஆ பிரார்த்தனை நடாத்தப்பட்டது.

தேசிய ஐக்கியத்துக்கான சர்வ மதங்கள் கூட்டமைப்பின் தலைவர், அல்ஹாஜ் அஸ் ஸெய்யத் கலாநிதி ஹஸன் மௌலானா அல்காதிரி துஆப்பிரார்த்தனையை நிகழ்த்தினார். தெவட்டகஹ ஜும்மா பள்ளிவாசல் தலைவர் அல்ஹாஜ் ரியாஸ் சாலி, பள்ளிவாசல் சார்பாக, அமைச்சருக்கு பொன்னாடை போர்த்தி விஷேட நினைவு சின்னமொன்றையும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், உலமாக்கள், தெவட்டகஹ பள்ளிவாசல் நிர்வாக சபையினர்கள், அகில இலங்கை சூபி தரீக்கா உயர்பீட உறுப்பினர்கள் உட்பட பெரும் திரளானோர் கலந்து கொண்டனர்.

கொழும்பு விவேகானந்தா கல்லூரியில் 1996 ஆம் ஆண்டு சாதாரண தரம் மற்றும் 1999 ஆம் ஆண்டு உயர்தரம் பயின்ற மாணவர்கள், பாடசாலை பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து, தலா 7,25,000 ரூபா பெறுமதியான ஸ்மார்ட் போர்ட்கள், மற்றும் மல்டி மீடியா சிஸ்டம் என்பவற்றை பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்தனர். அதிபர் திருமதி. சி. ரவிச்சந்திரிக்காவிடம் இவை கையளிக்கப்பட்டன. இந்நிகழ்வில், பழைய மாணவர் சங்க தலைவர், செயலாளர், பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும் கலந்துகொண்டனர்.

ஆடம்பரம், வீண் விரயங்களை தவிர்த்து சமூகப்பற்றுடன் செயற்பட முன்வருவோம்

நாட்டின் பொருளாதார நெருக்கடி நீங்கும் வரை, வீண்விரயத்தை தவிர்த்து பிறருக்கு உதவும் மனப்பாங்கை வளர்த்துக் கொள்ள வேண்டுமென, முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய கொழும்பு அமைப்பாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

பைஸர் முஸ்தபா நற்பணி மன்றம் வெளியிட்டுள்ள விசேட ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கையர்களாகிய நாம், நெருக்கடியான கால கட்டத்தில் இருக்கின்றோம். இத்தருணத்தில், பிறர் நலம் பேணுவதில் அதிக அக்கறை செலுத்துவோம். அத்துடன், ஆடம்பரத்தையும் வீண் விரயத்தையும் தவிர்ந்து கொள்வதில் கூடிய கவனம் செலுத்துவதும் சிறந்தது.

குறிப்பாக, செல்வந்தர்கள் தமது திருமண நிகழ்வுகள், விருந்துபசாரங்கள் போன்றவற்றில் இது விடயமாக சிந்தித்து செயற்படல் அவசியம்.

குறைந்த வருமானம் பெறும் கொழும்பு நகரின் சுமார் அறுபது வீதமானவர்கள் உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்படும் சாத்தியம் உள்ளது. இவ்வாறான நிலையிலும், கொழும்பில் நாளாந்தம் 350 மெட்ரிக் தொன் உணவு வீணடிக்கப்படுகிறது. முச்சக்கர வண்டிச் சாரதிகள் உட்பட அன்றாடம் வருமானம் ஈட்டும் பலர் பொருளாதார நெருக்கடியால் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.

எனவே, ஆடம்பர திருமண விருந்துகளுக்காக செலவு செய்து, இறைவனின் கோபத்தையும், மனிதர்களின் சாபத்தையும் தேடிக்கொள்ளக் கூடாது.

இயலுமான வரையில் சிறார்கள், தொழில் இழந்தோர், விதவைகள் மற்றும் நோயாளிகள் போன்றோருக்கு உதவி, உபகாரங்களைச் செய்து, மனித நேயத்துடன் வாழப் பழகுவோம். குழந்தைகள் வெறும் வயிற்றில் நித்திரைக்குச் செல்கின்றனர். பல குழந்தைகள் தினமும் பாடசாலைகளுக்குச் சமுகமளிக்காதுள்ளன. எனவே, இந்நிலைமைகளை புரிந்து சமூகப்பற்றுடன் வாழப்பழக வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேமன்சமூக இளந்தலைமுறையினருடன் மூத்தோரின் அனுபவங்களை பகிரும் செயலமர்வு

இலங்கை மேமன் சமூகத்தின் முதலாவது தலைமுறையினரின் அனுபங்களை, இளம் சமூகத்தினருடன் பகிர்ந்துகொள்ளும் விஷேட செயலமர்வு அண்மையில், கொள்ளுப்பிட்டியிலுள்ள மேமன் சங்கத் தலைமையகத்தில் இடம்பெற்றது. இச்சமூகத்தின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரும், டவர் மண்டப நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினருமான ஹாஸிம் உமரின் தலைமையில், நடந்த இந்நிகழ்வில், மேமன் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

இங்கு, மேமன் சமூக இளைய தலைமுறையினர் புரிந்துகொள்ளும் வகையில், மூத்த பரம்பரையினர், இலங்கைக்கு வந்த போது நிலவிய, சூழ்நிலைகள் குறித்த அனுபவங்கள் மற்றும் கருத்துக்கள் கலந்துரையாடப்பட்டன.

நிகழ்வின் சிறப்புப் பேச்சாளர்களாக ஹாஜி அன்வர் அஹமட், ஹாஜிஅஹமட் ரஹுமான், ஹாஜி ஏ சத்தார் அபூபக்கர், ஹாஜி சித்தீக் அஹமட் மற்றும் ஹாஜி ஜிக்கர்காஸிம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் சிறப்புப் பேச்சாளர்களை கௌரவிக்கும் பொருட்டு, சிறந்த வெகுமதிகளும் வழங்கப்பட்டன. ஹாஸிம் உமரிடமிருந்து பேச்சாளர்கள் வெகுமதிகளைப் பெறுகின்றனர்.

எரிபொருள் பற்றாக்குறை ஆசிரியர்கள், மாணவர்கள் அசௌகரியம்

மடுல்சீமை நிருபர்

நாட்டில் நிலவும் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக பல அரச மற்றும் தனியார் துறைகள் முடங்கும் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. நகர்ப்புற அரசாங்க பாடசாலைகளை எதிர்வரும் ஜூலை 10ஆம் திகதி வரை மூடுவதற்கான தீர்மானத்தை கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. எனினும் கிராமப்புற பாடசாலைகளை நடாத்துவது தொடர்பில் முடிவுகளை மேற்கொள்வதற்கான முழுமையான அதிகாரத்தை மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் வலயக்கல்வி காரியாலயங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் இதன் அடிப்படையில் கிழமையில் செவ்வாய், புதன், வியாழன் ஆகிய மூன்று தினங்களுக்கு கிராமபுற பாடசாலைகளை நடாத்துமாறும் கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டது. எனினும் பசறை, லுணுகலை, மடுல்சீமை, நமுனுகுல போன்ற கிராமப்புற பாடசாலைகளுக்கு நகர்ப்புறப்பகுதிகளிலிருந்து சென்ற பல ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும் உரிய போக்குவரத்து சேவைகள் இன்மையால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கினர். இதேவேளை மடுல்சீமை, லுணுகலை, நமுனுகலை போன்ற அதி கஷ்டப்பிரதேச பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் உரிய நேரத்தில் பஸ்கள் இன்மையால் பல கிலோமீற்றர் தூரம் நடந்து சென்றதை காணமுடிந்தது. மேலும் பலர் பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலே செயற்பட்டதன் காரணமாக பாடசாலைக்கு செல்ல முடியாமல் வீடுகளுக்கு திரும்பிச் சென்றதையும் காணக்கூடியதாகவிருந்தது.

இதற்கான உரிய தீர்வொன்றை விரைவில் வெளியிடுமாறு மடுல்சீமை மற்றும் லுணுகலை பிரதேசங்களில் கிராமப்புற பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அத்தியாவசிய சேவைகளை வழங்குவது தொடர்பில் மாகாண மட்ட கலந்துரையாடல்

பதுளை தினகரன் விசேட நிருபர்

தற்போதைய எரிபொருள் நெருக்கடிகளுக்கு மத்தியில் கல்வி மற்றும் அத்தியாவசிய சேவைகளை வழங்குவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பிலான கலந்துரையாடல் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் ஆளுநர் அலுவலகத்தில் இடம் பெற்றது.

இதன்போது தனியார் பயணிகள் பொது போக்குவரத்து சேவைகள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டது.

தனியார் பஸ்கள் மற்றும் சிசுசரிய பஸ்களுக்கு எவ்வித தடையுமின்றி எரிபொருள் வழங்கப்பட வேண்டிய முறை தொடர்பில் ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியதுடன் அதற்கான வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்துமாறும் பணிப்புரை விடுத்தார்.

மாகாண பிரதான செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட அத்தியாவசிய சேவைகளை வழங்கும் இலகுரக வாகனங்கள் மற்றும் பாடசாலை போக்குவரத்து வான்களுக்கு எரிபொருள் வழங்கும் முறைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

அத்தியாவசிய சேவைகள் மற்றும் பொதுப்போக்குவரத்தைத் தடங்கலின்றி தொடரும் நோக்குடன் அறிமுகப்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தின் ஊடாக முறைக்கேடுகள் செய்து பயனைப் பெற முயற்சிக்கும் நபர்களுக்கு எரிபொருள் வழங்குவதை இடைநிறுத்தவும் இதன்போது ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இக்கலந்துரையாடலில் ஊவா மாகாண பிரதான செயலாளர் P.B. விஜயரத்ன, ஆளுநரின் செயலாளர் எம். எம். விஜயநாயக, பிரதி பிரதான செயலாளர் (திட்டமிடல்) ஆர்.எச்.சி. பிரியந்தி, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சந்தியா அபன்வெல, மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் சி. அத்தரவத்த, கூட்டுறவு எரிபொருள் நிலைய மேலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

நீர் வழங்கல் அமைச்சு

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

விலைக்கோரல் அறிவித்தல்

பின்வரும் வேலைகள்/ வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இல.	ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம்	மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா)	தேவையான விலை மனு பிணை	தேவையான தகைமை	VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா)	தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம்	இறுதித் திகதி மற்றும் நேரம்
	சிவில் கேள்விகள்						
01	பூஜாப்பிட்டிய நீர் வழங்கல் திட்டத்திற்கு வருமானமற்ற நீரைக் குறைப்பதற்கான வாடகை சேவை ஒப்பந்த இல: **RSC-C/CN/CIVIL/O&M/ PUJAPITIYA/2022/40**	6,000/-+ VAT	ரூபா 107,000/-	நீர் வழங்கல் துறையில் C6 மற்றும் C7 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு	7.8 Million	பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068, Fax: 081-2388027 கேள்வி முன்னோடிக் கூட்டம் 2022-07-06ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கட்டுகஸ்தோட்ட (மத்திய வடக்கு) முகாமையாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.	14/07/2022 பி.ப. 2.00
02	குண்டசாலை நீர் வழங்கல் திட்டத்திலுள்ள வருமானமற்ற நீரைக் குறைப்பதற்கான ஒப்பந்தம் ஒப்பந்த இல: **RSC-C/CE/CIVIL/O&M/KUNDASALE/2022/04**	12,500/-+ VAT **	ரூபா 250,000/-	நீர் வழங்கல் துறையில் C5 மற்றும் C6 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு	16.71 Million	பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068, Fax: 081-2388027 கேள்வி முன்னோடிக் கூட்டம் 2022-07-06ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு குண்டசாலை (மத்திய கிழக்கு) முகாமையாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.	14/07/2022 பி.ப. 2.00
	வழங்கல் கேள்விகள்						
03	பிராந்திய ஒத்துழைப்பு நிலையத்திற்கு (மேற்கு தெற்கு) 2022ஆம் வருடத்தின் இறுதி ஆறு மாதங்களுக்கு நீர்க் கட்டண பற்றுச்சீட்டுகளை அச்சிடுதல் ஒப்பந்த இல : **W-S/P&C/S/WB(02)/ DGM/O&M/2022/39**	4,000/-+ VAT	ரூபா 41,200/-	இலங்கை மின்சார சபை, டெலிகொம், தேநீவவச போன்ற சேவை அமைப்புகளுக்கு ஆவணங்களை அச்சிடும் துறையில் அனுபவம் வாய்ந்த நிறுவனங்கள்	4.1 Million	பி.ஒ.நி. (மேற்கு-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ. Tel: 011-2224888 Fax : 011-2637945/ 011-2637946 / 0112637947	14/07/2022 மு.ப. 10.00
	M&E கேள்விகள்						
04	கலலேல்ல நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி - புதிய நகரம் 1 மற்றும் கல்லேல்ல நீர்த் தாங்கி கோபுரங்களின் தற்போதுள்ள UPS Backup Time ஐ மேம்படுத்துதல் ஒப்பந்த இல **:O&M (POL)/NC/DGM/SUP/UPS/GALL/2022/092.**	12,500/-+ VAT **	ரூபா 297,600/-	உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ்	-	பி.ஒ.நி (வடமத்தி), தேநீவவச, கொடகே மாவத்தை, அநுராதபுரம். Tele : 025-2222296 Fax: 025-2225609	20/07/2022 பி.ப. 2.00
	சேவைக் கேள்விகள்						
05	கல்லேல்ல நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியிலுள்ள அலுவலகக் கட்டிடங்கள், பம்பி நிலையங்கள் மற்றும் ஏனைய கட்டிடங்கள் மற்றும் இடப்பரப்புகளுக்கான சுத்திகரிப்பு மற்றும் சேவை வழங்கல்களுக்கான சேவை ஒப்பந்தம் ஒப்பந்த இல: **O&M(POL)/NC/DGM/JUN-SER/ GALL/2022/096**	4,000/-+ VAT	ரூபா 42,810/-	ஜெனிட்டோரியல் சேவைகளுக்காக பதிவு செய்யப்பட்டவர்கள்	-	பி.ஒ.நி (வடமத்தி), தேநீவவச, கொடகே மாவத்தை, அநுராதபுரம். Tele : 025-2222296 Fax: 025-2225609	20/07/2022 பி.ப. 2.00
06	2022-2023ஆம் வருடங்களில் பொலன்னறுவை பிராந்தியத்திலுள்ள தவணை சேவை நிலையங்களுக்கான ஒப்பந்தம் ஒப்பந்த இல: **O&M(P)/NC/DGM/VEH-SER/POL-REGION/2022/064R.**	4,000/-+ VAT	ரூபா 44,192/-	வாகன சேவை வழங்குநர்கள்	-	பி.ஒ.நி (வடமத்தி), தேநீவவச, கொடகே மாவத்தை, அநுராதபுரம். Tele : 025-2222296 Fax: 025-2225609	20/07/2022 பி.ப. 2.00
07	கடவத்தையிலுள்ள பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்கு ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல் ஒப்பந்த இல: **RSC(W/N)/SS/JANI/KEL(O&M)/2022/43**	2,000/-+ VAT	ரூபா 26,500/-	ஜெனிட்டோரியல் சேவை வழங்கும் துறையில் ஆகக் குறைந்தது மூன்று வருட கால அனுபவம்	1.8 Million	பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை. Tele: 0112922129, Fax: 0112922146	20/07/2022 மு.ப. 10.00

2022-06-15ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. பிராந்திய ஒத்துழைப்பு நிலையத்திற்கு (WN) தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குதல் ஒப்பந்த இல: **RSC(W/N)/SS/LS/RSC(O/M)/2022/40,** ஆவணங்கள் வழங்கும் இடம் மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய நபர் கேள்விகள் மற்றும் ஒப்பந்தப் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை Tele: 011-2605328 Fax: 011-2635885 மற்றும் பிஒநி **(W/N)** அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை Tele:0112922129 ,Fax:0112922146 என்பதாகும் என்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும்.

2022-06-15ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. களனி பிராந்தியத்திற்கு தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குதல் ஒப்பந்த இல: **RSC(W/N)/SS/LS/KEL(O&M)/2022/38,** ஆவணங்கள் வழங்கும் இடம் மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய நபர் கேள்விகள் மற்றும் ஒப்பந்தப் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை Tele: 011-2605328 Fax: 011-2635885 மற்றும் பிஒநி **(W/N)** அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை Tele:0112922129 , Fax:0112922146 என்பதாகும் என்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும்.

2022-06-15ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. கம்பஹா பிராந்த்தியத்திற்கு தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குதல் ஒப்பந்த இல: **RSC(W/N)/SS/LS/GAM (O&M)/2022/39,** ஆவணங்கள் வழங்கும் இடம் மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய நபர் கேள்விகள் மற்றும் ஒப்பந்தப் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை Tele: 011-2605328 Fax: 011-2635885 மற்றும் பிஒநி **(W/N)** அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை Tele:0112922129 , Fax:0112922146 என்பதாகும் என்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும்.

	வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்						
08	பிராந்திய ஒத்துழைப்பு நிலையத்திற்கு (NC) வாகனத்தை வாடகைக்கமர்த்துதல் ஒப்பந்த இல: **RSC/NC/DGM/HV/SP/2022/087R.**	4,000/-+ VAT	ரூபா 32,550/-	வாகன உரிமையாளர்கள் அல்லது வாகன சேவை வழங்குநர்கள்	பிஒநி (வடமத்தி), தேநீவவச, கொடகே மாவத்தை, அநுராதபுரம். Tele : 025-2222296 Fax: 025-2225609	20/07/2022 பி.ப. 2.00
09	களனி பிராந்தியத்திற்கு க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல் ஒப்பந்த இல : **RSC(W/N)/SS/HIRING/KEL(O&M)/2022/44**	2,000/-+ VAT	ரூபா 5,000/-	ஆவணத்தின் பிரகாரம்	பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை. Tele: 0112922129 Fax: 0112922146	20/07/2022 மு.ப. 10.00
10	களனி பிராந்தியத்திற்கு பெக்கோ லோடர் ஒன்றை வாடகைக்கமர்த்துதல் ஒப்பந்த இல : **RSC(W/N)/SS/HIRING/KEL(O&M)/2022/33R**	6,000/-+ VAT	ரூபா 6,000/-	ஆவணத்தின் பிரகாரம்	பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை. Tele: 0112922129 Fax: 0112922146	20/07/2022 மு.ப. 10.00
11	உதவிப் பொது முகாமையாளருக்கு (மேற்கு - தெற்கு) மோட்டார் காரொன்றை வாடகைக்கமர்த்துதல் ஒப்பந்த இல : **W-S/P&C/H(01)/DGM/O&M/2022/31R-02**	2,000/-+ VAT	ரூபா 5,000/-	இயைபுடைய வாகன உரிமையாளர்கள்	பி.ஒ.நி. (மேற்று-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ. Tel: 011-2224888 Fax : 011-2637945/ 011-2637946 / 0112637947	14/07/2022 மு.ப. 10.00
12	தெமோதர நீர் வழங்கல் திட்டத்திற்கு சிங்கள் கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல் ஒப்பந்த இல : **RSC(UVA)/DGM(UVA)/O&M/DEMODARA/2022/89**	2,000/-+ VAT	ரூபா 5,000/-	ஆவணத்தின் பிரகாரம்	பி.ஒ.நி. (ஊவா), கேள்விப் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை. Tele: 0552230934 Fax: 0552230974/0552222448	14/07/2022 பி.ப. 2.00
13	மகுள்எல்ல நீர் வழங்கல் திட்டத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல் ஒப்பந்த இல : **RSC(UVA)/DGM(UVA)/O&M/MAKULELLA/2022/97**	500/-+ VAT	ரூபா 3,000/-	ஆவணத்தின் பிரகாரம்	பி.ஒ.நி. (ஊவா), கேள்விப் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை. Tele: 0552230934 Fax: 0552230974/0552222448	14/07/2022 பி.ப. 2.00
14	புத்தள நீர் வழங்கல் திட்டத்திற்கு சிங்கள் கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல் ஒப்பந்த இல : **RSC(UVA)/DGM(UVA)/O&M/BUTTALA/2022/68**	2,000/-+ VAT	ரூபா 5,000/-	ஆவணத்தின் பிரகாரம்	பி.ஒ.நி. (ஊவா), கேள்விப் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை. Tele: 0552230934 Fax: 0552230974/0552222448	14/07/2022 பி.ப. 2.00
15	பண்டாரவளை நீர் வழங்கல் திட்டத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல் ஒப்பந்த இல : **RSC(UVA)/DGM(UVA)/O&M/ BANDARAWELA/2022/98**	500/-+ VAT	ரூபா 3,000/-	ஆவணத்தின் பிரகாரம்	பி.ஒ.நி. (ஊவா), கேள்விப் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை. Tele: 0552230934 Fax: 0552230974/0552222448	14/07/2022 பி.ப. 2.00

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். (“**” எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம்தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

தலைவர்,
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.

செங்கடகல பினான்ஸ் பீ.எல்.சீ

31ம் மார்ச் 2022 முடிவுற்ற ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கை

(இலங்கை மத்திய வங்கியின் 2006ஆம் ஆண்டு 02 ஆம் இலக்க கம்பனிகள் வழிகாட்டல் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்டது.)

Fitch Ratings Lanka Ltd.
BBB+(lka)

வருமான கூற்று

முடிவுற்ற ஆண்டிற்கான 31ம் மார்ச்	கம்பனி 2022 ரூ.	கம்பனி 2021 ரூ.	குழுமம் 2022 ரூ.	குழுமம் 2021 ரூ.
மொத்த வரமானம்	6,344,549,306	6,342,155,868	6,446,212,035	6,434,208,288
வட்டிவருமானம்	6,020,701,098	5,978,561,933	6,021,828,921	5,979,719,312
வட்டிச்செலவு	(2,430,425,436)	(3,215,269,432)	(2,430,467,299)	(3,212,111,045)
நிகர வட்டிவருமானம்	3,590,275,662	2,763,292,501	3,591,361,622	2,767,608,267
கட்டணம் மற்றும் தரகு வரவு	59,909,000	56,147,623	242,862,671	241,095,601
கட்டணம் மற்றும் தரகுச்செலவு	(13,626,837)	(11,476,609)	(13,626,837)	(11,476,609)
நிகர கட்டணம் மற்றும் தரகு வருமானம்	46,282,163	44,671,014	229,235,834	229,618,992
வணிக செயற்பாட்டு நிகர இலாபம்	87,745,348	46,126,377	88,903,399	46,714,345
சந்தைப் பெறுமதியில் நிதிச் செயற்பாடுகளால் நிகர இலாபம்/(நட்டம்)	(61,556,651)	82,723,932	(61,833,520)	86,951,006
ஏனைய செயற்பாட்டு வருமானம்	237,750,511	178,596,003	154,450,564	79,728,024
தேறிய செயற்பாட்டு வருமானம்	263,939,208	307,446,312	181,520,443	213,393,375
தனிப்பட்ட கோளாறுக்கான செலவீனங்கள்/(தலைகீழ்)	3,900,497,033	3,115,409,827	4,002,117,899	3,210,620,634
கூட்டு கோளாறுக்கான செலவீனங்கள்	(596,679,543)	(496,679,711)	(596,679,543)	(496,679,711)
தேறிய செயற்பாட்டு வருமானம்	3,303,817,490	2,618,730,116	3,405,438,356	2,713,940,923
தனிப்பட்ட செலவுகள்	(787,766,078)	(614,184,290)	(816,658,079)	(631,320,896)
சொத்து, இயந்திர வகை, உபகரணங்கள், தேய்மானம்	(400,029,740)	(413,915,441)	(409,001,030)	(415,336,630)
அருவச் சொத்துக்களின் நிலைமாற்றம்	(13,496,354)	(12,818,255)	(13,568,558)	(12,841,963)
ஏனைய செயற்பாட்டுச்செலவுகள்	(589,501,527)	(628,766,764)	(600,327,758)	(638,377,284)
(VAT) முன் நிதி சேவைகளுக்கான செயற்பாட்டு இலாபம்.	1,513,023,791	949,045,366	1,565,882,931	1,016,064,150
நிதிச்சேவைகளுக்கான (VAT)	(327,377,102)	(241,700,312)	(327,377,102)	(241,700,312)
வருமானவரிக்கு முன்னதான இலாபம்	1,185,646,689	707,345,054	1,238,505,829	774,363,838
வருமானவரிச்செலவு	(282,675,480)	(152,599,979)	(308,879,755)	(184,480,072)
